கவனிக்க.— 13.12.2024 ஆம் திகதிய 2415 ஆம் இலக்க, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II (தமிழ் மொழிமூலம்) பிரசுரிக்கப்படவில்லை.

கவனிக்க.— இந்த வர்த்தமானியின் பகுதி VI இல் 2024 ஆம் ஆண்டுக்கான திருகோணமலை மாவட்டத்தின் நீதாசன வலயங்களின் யூரிமார் பெயர்ப்பட்டியல் ஒன்று சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் பிரசுரிக்கப்படுகின்றது.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 2416 - 2024 දෙසැම්බර් මස 20 වැනි සිකුරාදා - 2024.12.20**

2416 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 20 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | - | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 2360 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பி வைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2025, சனவரி மாதம் 10 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2024, திசெம்பர் மாதம் 27 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரனியல் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2024, ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


2357- B 82637 - 5,403 (2024/12)

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

1. **வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிற பதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

2. **சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரசாங்க சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர்; தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

3. **நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள்** :

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுரத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/ 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரசாங்க சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரசாங்க சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரசாங்க சேவையில் ஏற்கனவே நிரந்தர/ தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த) தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

4. **பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரசாங்க சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரசாங்க சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரசாங்க சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

5. **யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

6. **அரசாங்க சேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரசாங்க சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவு செய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமையபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

7. **தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம், படி முதலியன சேர்ந்திருக்கா.

8. **ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/ 90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

## பரீட்சார்த்திகளுக்கான விதிகளும் அறிவுறுத்தல்களும்

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் காலத்துக்குக்காலம் வெளியிடப்படுகின்ற சட்டங்களுக்கும் ஒழுங்குமுறைகளுக்கும் ஏற்ப ஒழுகுவதற்கு சகல பரீட்சார்த்திகளும் கட்டுப்பட்டவர்களாவர்.

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் 20 ஆம் வாசகத்தின் மூலம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய கீழ்க் குறிப்பிடப்படும் நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.

அனைத்துப் பரீட்சார்த்திகளும், கீழ்க் குறிப்பிடப்படும் விதிகளுக்கு கட்டுப்பட வேண்டும் என்பதுடன் இவ் விதிகளில் எவற்றையேனும் மீறும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தீர்மானத்துக்கு அமைய கீழ்க் குறிப்பிடப்படும் தண்டனைகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தண்டனைகளுக்கு உட்படுத்தப்படுவார்.

I. விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்ற முழுப் பரீட்சைக்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கு தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
II. விசாரணைக்கு உட்படுத்தப்படும் பரீட்சையின் ஒரு பாடத்திற்கு அல்லது மொத்தப் பரீட்சைக்கும் தகுதியற்றவர் ஆக்குதல்;
III. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நடாத்தப்படுகின்ற அனைத்துப் பரீட்சைகளுக்கும் தோற்றுவதற்கு வாழ்நாள் தடை விதித்தல்;
IV. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற பரீட்சைகளில் தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
V. இடைநிறுத்தப்பட்ட, பரீட்சைக்கான தடை உடன் கடிதம் ஒன்றை வழங்குதல்;
VI. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு சான்றிதழ் தடை செய்யப்படல்;
VII. பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் கீழ் குற்றவியல் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்வதற்காக பரீட்சார்த்தியை காவற்றுறையிடம் ஒப்படைத்தல் அல்லது அக்குறித்த செயற்பாடு தொடர்பாக காவற்றுறையில் புகார் செய்தல்;
VIII. பரீட்சார்த்தி அரசாங்க ஊழியராக அமையும் சந்தர்ப்பத்தில் குறித்த பரீட்சார்த்தியின் செயற்பாடு தொடர்பாக (ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக) குறித்த பரீட்சார்த்தியின் நியமன அதிகாரிக்கு அறிவித்தல்.

பரீட்சைக்கு முன்பு, பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அல்லது பரீட்சைக்கு பின்பு அல்லது வேறு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அவ்வாறான பரீட்சார்த்தி தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், தம்வசம் கொண்டவர் ஆவார். இது தொடர்பாக அவரால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் இறுதியானதாகும்.

1. சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்தினுள் மற்றும் பரீட்சை நடைபெறும் வளாகத்தினுள் பரீட்சை மேற்பார்வையாளருக்கு அவரது பணிக் குழாமுக்கு, அதே போன்று ஏனைய பரீட்சார்த்திகளுக்கு இடையூறு அல்லது தடங்கல்கள் ஏற்படாத வகையில் நடந்துகொள்ள வேண்டும். பரீட்சார்த்திகள் பரீட்சை வளாகத்தின் சொத்துகளுக்கு அல்லது பரீட்சை ஊழியர்களின் தனிப்பட்ட சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்துதல் கூடாது.
2. பரீட்சார்த்திகள் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலப் பகுதியிலும் பரீட்சை ஆரம்பிப்பதற்கு முன்பும் அதே போன்று பரீட்சை நடைபெற்று முடிவடைந்தவுடனும் பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழுவின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப நடந்து கொள்ளல் வேண்டும்.
3. பரீட்சையின் போது வினாப்பத்திரத்திற்கு விடையளிப்பது ஆரம்பிக்கப்பட்டு அரை மணித்தியாலம் கழிந்த பின்னர் எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை முடிவடையும் வரை எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கும் இடமளிக்கப்பட மாட்டாது. செயன்முறைப் பரீட்சைகள் அல்லது வாய்மொழி மூலமான பரீட்சைகளுக்கு உரிய நேரத்திற்கு சமுகம் அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
4. சகல பரீட்சார்த்திகளும் தமது சுட்டெண்ணுக்குரிய ஆசனம் தவிர்ந்த வேறு எந்த இடத்திலும் அமர்தல் கூடாது. பரீட்சை மேற்பார்வையாளரின் விசேட அனுமதி இன்றி தன்னுடைய இடத்தை மாற்றக் கூடாது. தனக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தைத் தவிர வேறு இடத்தில் அமர்தல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்பட நேரிடும்.
5. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி பேணப்பட வேண்டும். எக் காரணம் கொண்டும் பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சை மேற்பார்வை பணிக்குழுவில் உள்ள ஒருவரைத் தவிர பரீட்சை மண்டபத்தினுள் அல்லது வெளியே இருக்கும் எவர் ஒருவருடனும் எந்தவித காரணத்திற்காகவும் கதைத்தல் அல்லது தகவல் பரிமாறல் அல்லது வேறு எந்தவிதமான கொடுக்கல் வாங்கலிலும் ஈடுபடுதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.
6. பரீட்சை சுட்டெண்ணை மட்டும் கொண்டே பரீட்சார்த்தியின் விடைத்தாள்கள் இனங்காணப்படுகின்றமையால் விடைத்தாளில் தன்னுடைய பெயரை எழுதுதல், விடைத்தாளை இனங்கண்டு கொள்ளக்கூடிய வகையில் ஏதேனும் குறியீடு அல்லது குறிப்பு இடுதல், விடைத்தாளில் அநாகரிகமான அல்லது அவசியமற்ற விடயங்களை எழுதுதல், விடைத்தாளுடன் நாணயத்தாள்களை இணைத்தல் ஆகியவை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன. மேலும் வேறு எவரேனும் பரீட்சார்த்தியின் சுட்டெண்ணை தன்னுடைய விடைத்தாளில் எழுதுதலும் மோசடி நடவடிக்கை ஒன்றைச் செய்வதற்கு முயன்றதாகக் கருதப்படும். இனங்கண்டு கொள்ள முடியாத வகையில் சுட்டெண் எழுதப்பட்ட விடைத்தாள்களும் நிராகரிக்கப்படும்;
7. உமக்கு பரீட்சை மண்டபத்தினுள் வழங்கப்படும் தாள்கள் (பரீட்சை நடைபெறும் திகதிக்குரிய நோக்குனரின் குறுகிய கையொப்பம் மற்றும் திகதி இடப்பட்ட விடை எழுதும் தாள்கள்) தவிர வினாத்தாளிலோ அல்லது மேசையிலோ அல்லது வேறு ஏதேனும் இடத்திலோ எவற்றையும் எழுதுதல் கூடாது. இந்த அறிவுறுத்தல்களுக்கு மாறாக செயற்படுதல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்படும்.
8. பரீட்சார்த்திக்கு வழங்கப்படுகின்ற தாள்களை அல்லது விடை எழுதும் புத்தகத்தை கிழித்தல் அல்லது கசக்குதல் கூடாது. பரும்படி வேலைகளை செய்து பார்ப்பதற்காக உபயோகிக்கும் சகல தாள்களையும் தெளிவாக குறுக்காக கோடிட்டு விடைத்தாளுடன் இணைத்தல் அல்லது விடைத்தாளுடன் கையளித்தல் அல்லது வழங்கப்படுகின்ற அறிவுறுத்தலின் படி செய்தல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதப்பட்ட எதனையும் வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. ஒரே வினாவிற்கான விடை இரு இடங்களில் எழுதப்பட்டிருப்பின் அவசியமற்ற விடையைத் தெளிவாக வெட்டி விட வேண்டும்.
9. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக உமக்கு வழங்கப்படுகின்ற தாள்கள் மற்றும் வேறு பொருட்களை பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான அனைத்துப் பொருட்களும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு சொந்தமானதுடன் இவ் விதியினை மீறுதல் ஒரு தண்டனைக்குரிய செயற்பாடாகக் கருதப்படும்.
10. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக தனக்கு வழங்கப்படுகின்ற காகிதாதிகள் ஒவ்வொரு பரீட்சையின் போதும் தனதருகே வைத்துக் கொள்ளக்கூடிய எழுத்து மூலமான அனுமதியுள்ள பொருட்கள் தவிர்ந்த ஏனைய குறிப்புப் புத்தகங்கள், குறிப்புகள் உள்ளடங்கிய தாள்கள் அல்லது கடதாசித்துண்டுகள் போன்றவை பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பத்தில் தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் கூடாது. அது போன்றே பரீட்சை மண்டபத்தினுள் கையடக்கத் தொலைபேசி, இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/ கருவிகள் (Electronic Communication Instruments/ Devices) தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் மற்றும் அந்த சாதனங்கள்/கருவிகளை உபயோகித்து வெளி நபர்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் பரீட்சை நடைபெறும் போது வேறு நபர்களுக்கு மற்றும் சமூக ஊடகங்களுக்கு தகவல் அனுப்புதல் மோசடிச் செயற்பாடு என்பதுடன் தண்டனைக்குரிய குற்றமாகும்.
11. இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் மேற்குறிப்பிட்ட 10ஆவது பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாக உபயோகிக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டால் அச் சாதனங்கள்/கருவிகள் உரிய விசாரணை நடவடிக்கைகள் முடிவடையும் வரை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வசம் எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
12. பரீட்சை மண்டபத்தில் அமர்ந்த பின்னர், பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் எந்தவொரு பரீட்சார்த்தியும் தன் அருகே பரீட்சைக்காக கொண்டு வருவதற்கு அனுமதிக்கப்படாத எந்தவொரு பொருளையும் அல்லது உபகரணத்தையும் வைத்திருத்தல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழாம் கட்டளையிட்டால் சகல பரீட்சார்த்திகளும் தன் வசம் உள்ளவற்றை வெளிப்படுத்துவதற்கும் மற்றும் பரிசோதிப்பதற்கும் கட்டுப்படுவதுடன் இவ்வாறான தேவைப்பாட்டினை மீறுவது மோசடியான செயற்பாட்டை செய்வதற்கு முயற்சித்ததாகக் கருதப்படும்.
13. எவரேனும் ஒரு பரீட்சார்த்தி வேறு ஒரு பரீட்சார்த்தியின் விடைத்தாளிலிருந்து அல்லது புத்தகத்திலிருந்து அல்லது தாளிலிருந்து அல்லது குறிப்பெழுதிய தாள்களிலிருந்து அல்லது சமிக்ஞைகள் மூலம் அல்லது வேறு ஏதேனும் ஒன்றிலிருந்து பார்த்து எழுதுதல் அல்லது பார்த்து எழுத முயற்சித்தல் அல்லது மோசடியாக நடந்து கொள்ளல் என்பன குற்றமாகும். வேறு பரீட்சார்த்திக்கு உதவி செய்தல், வேறு பரீட்சார்த்தியிடமிருந்து அல்லது நபரிடமிருந்து அல்லது பரீட்சை பணிக் குழுவினரிடமிருந்து உதவி பெறுதல் குற்றம் என்பதுடன் விடையளித்து முடிந்த சகல தாள்களையும் எழுதிக் கொண்டிருக்கும் தாளுக்குக் கீழே வைத்து விடையளித்தல் வேண்டும். எழுதுகின்ற தாள்களை மேசையின் மேல் பரப்பி வைத்திருத்தல் கூடாது.
14. பரீட்சை ஆரம்பிக்கப்பட்டு வினாத்தாளுக்கு விடையளிக்கும் போது எக்காரணம் கொண்டும் குறுகிய நேரத்திற்குக் கூட பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கு எந்தவொரு பரீட்சார்த்திக்கும் இடமளிக்கப்பட மாட்டாது. எனினும், ஒரு பரீட்சார்த்திக்கு மலசலகூடத்திற்கு செல்வதற்காக பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டால் பரீட்சை மேற்பார்வையாளரின் உதவி பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரின் கண்காணிப்பின் கீழ் பரீட்சார்த்திக்கு சிறிது நேரம் வெளியே செல்வதற்கு அனுமதிக்கப்படுவார். அவ்வாறு வெளியே செல்லும் முன்பும், மீண்டும் பரீட்சை மண்டபத்திற்குள் வரும் போதும் அவர் சோதனைக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.
15. பரீட்சை மண்டபத்தில் விடையளிக்கத் தொடங்குவதற்கு முன் அல்லது பின் உரிய பரீட்சார்த்திக்குப் பதிலாக போலிப் பரீட்சார்த்தி ஒருவர் தோற்றுதல் தண்டனைக்கு உள்ளாகக்கூடிய செயற்பாடாகும். ஆளடையாள அட்டையை மாற்றுதல் அல்லது போலி அடையாள அட்டையைச் சமர்ப்பித்தல் ஒரு மோசடிச் செயற்பாடாகக் கருதப்படும்.
16. பரீட்சார்த்தி ஒருவர் அல்லது பரீட்சார்த்தி அல்லாத ஒருவர் எந்தவொரு பரீட்சார்த்திக்கும் தவறான முறையில், மோசடி செய்யும் வகையில் உதவி செய்தல் ஒரு பாரிய குற்றமாக கருதப்படும்.
17. பரீட்சார்த்தி ஒருவர் கீழ்க் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படல் வேண்டும்:
    (i) சகல பரீட்சார்த்திகளும் தனது அனுமதிப்பத்திரத்தில் கையொப்பத்தினை உறுதி செய்து கொள்வதும், விண்ணப்பிக்கப்பட்ட பாடங்கள் மற்றும் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள பாடங்களுக்கிடையில் பொருந்தாத தன்மை காணப்படின் பரீட்சைத் திணைக்களத்தில் விசாரித்து பரீட்சைக்கு முன் அதைத் திருத்திக் கொள்வதும் மேற்கொள்ளப்பட வேண்டும்;
    (ii) பரீட்சை ஆரம்பிப்பதற்கு அரை (1/2) மணித்தியாலத்திற்கு முன்னர் பரீட்சை மண்டபத்திற்கு சமுகமளித்தல் உசிதமானது என்பதுடன், பரீட்சை மண்டபம் நிச்சயமாகத் தெரியாதவிடத்து பரீட்சை ஆரம்பிக்கும் தினத்திற்கு முன்னரே அது குறித்து விசாரித்து பரீட்சை மண்டபத்தை சரியாக இனங்காணல் சிறந்தது;
    (iii) பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி ஒவ்வொரு பாடங்களுக்குத் தோற்றும் போதும் தனது ஆள் அடையாள அட்டையை வழங்கி தனது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.
        (a) ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்தில் சமர்ப்பிக்காவிடின், பரீட்சார்த்தியாய் இருத்தல் இரத்துச் செய்யப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், ஏதேனும் காரணத்தால் அதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்திற்கு கொண்டு வர மறந்திருப்பின் அதனைப் பற்றி பரீட்சை மேற்பார்வையாளருக்கு அறிவித்து பரீட்சை முடிவடைவதற்கு முன்னர் அவற்றைச் சமர்ப்பிப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
        (b) சகல பரீட்சார்த்திகளும் தனது ஆள் அடையாளம் தெளிவாக வெளிப்படுத்தும் வகையில், முழு முகத்தையும் நன்றாக அடையாளம் காணக்கூடிய வகையில் பரீட்சை நடைபெறும் கால எல்லையில் பரீட்சை மண்டபத்தில் இருக்க வேண்டும்.
    (iv) பரீட்சார்த்தி புளூடூத் (Bluetooth) போன்ற இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகளை (Electronic Communication Devices) உபயோகிக்கவில்லை என்பதனை உறுதி செய்து கொள்வதற்காக பரீட்சை மண்டபத்தில் தனது இரு காதுகளையும் தெளிவாகத் தெரியும் வகையில் வைத்திருத்தல் வேண்டும்;
    (v) பரீட்சை மண்டபத்தில் உமக்கு வழங்கப்படுகின்ற தாள்களை விடுத்து வேறு எவ்வித கடதாசிகளையும் விடையளிப்பதற்கு உபயோகிக்கக் கூடாது. எஞ்சிய கடதாசிகளை மற்றும் வேறு பொருட்களை அசுத்தப்படுத்தாது மீண்டும் உபயோகிக்கக்கூடிய வகையில் உமது மேசையின் மேல் வைக்க வேண்டும்;
    (vi) பரீட்சார்த்திகள் தங்களது பேனா, பென்சில், அழிறப்பர், அடிமட்டம், கேத்திரகணித உபகரணங்கள், வர்ணப் பென்சில் பெட்டி, வர்ண சோக் பெட்டி போன்றவற்றைக் கொண்டு வருதல் வேண்டும்;
    (vii) நீங்கள் உபயோகிக்கும் விடையளிக்கும் புத்தகம் மற்றும் சகல தாள்களிலும் விடையெழுத தொடங்கும் போது உடனடியாக சுட்டெண்ணைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். விடைத்தாள்களின் இருபுறமும் தெளிவாக, சுத்தமாக விடையெழுத வேண்டும். வினாவொன்றின் ஒரு பகுதிக்கு விடையெழுதிய பின் அவ் வினாவின் மற்றைய பகுதியை ஆரம்பிப்பதற்கு முன் ஒரு வரியையாவது வெறுமையாக விடுதல் வேண்டும். ஒவ்வொரு வினாக்களுக்குமான விடையினைப் புதிய பக்கத்தில் ஆரம்பித்தல் வேண்டும்;
    (viii) விடையளிக்கும் தாளின் இடதுபுற விளிம்புக்கோடு காணப்படுவது வினாக்களின் இலக்கங்களை எழுதுவதற்காகும். வலதுபுற விளிம்புக்கோடு ஒதுக்கப்பட்டிருப்பது மதிப்பிடுபவரின் உபயோகத்திற்காகும். அதனால் அவற்றில் எதுவும் எழுதுதலாகாது. உம்மால் விடையளிக்கப்பட்ட வினாக்களின் இலக்கங்களைப் பிழையாக இடுவது குழப்பத்திற்குக் காரணமாக அமையும் என்பதனால் வினா இலக்கத்தைச் சரியாக எழுதுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்;
    (ix) கணித வினாக்களுக்கு விடையளிக்கும் போது கணக்குச் செய்முறைகள் பார்த்த மற்றும் பரும்படி வேலைகள் அந்தந்த ஒழுங்கில் கணக்கிற்கான விடையைக் கண்டு பிடித்ததன் ஒரு பகுதியாகக் காட்டப்பட வேண்டும். அவசியமான இடங்களில் வரையப்படும் வரிப்படங்கள் மற்றும் படங்கள் சரியானவையாகவும் குறிப்பிடத்தக்க அளவு பெரிதானதாகவும் இருத்தல் வேண்டும்;
    (x) கட்டாயமான வினா மற்றும் தெரிவு செய்யப்பட வேண்டிய ஏனைய வினாக்கள் தொடர்பாக வினாப்பத்திரத்தில் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்தல் வேண்டும். வினாப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப விடையளிக்கப்படாத சந்தர்ப்பங்களில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது;
    (xi) ஒவ்வொரு வினாவிற்கும் விடையளித்து முடிந்த பின் விடையளித்த புத்தகத்திற்கு மேலதிகமாக எழுதிய தாள்களை பக்க இலக்கங்களின் ஒழுங்கில் இணைத்து இடதுபுற மேல்மூலையில் கழறாத வகையில் கட்டுதல்/இணைத்தல் வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளிக்கும் முன் சகல விடைத்தாள்களும் இணைக்கப்பட்டுள்ளனவா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளித்த பின் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லப்பட்ட எந்தவொரு விடை எழுதிய தாளும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட மாட்டாது;
    (xii) உங்கள் விடைத்தாளை பரீட்சை மேற்பார்வையாளரிடம் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரிடம் கையளித்தல் வேண்டும். விடைப்பத்திரங்களை சேகரிக்கும் வரை உங்களது ஆசனத்தில் அமர்ந்திருத்தல் வேண்டும். அவ்வாறு செய்வதற்குத் தவறுவதானது, சிலவேளை உமது விடைப்பத்திரம் காணாமல் போவதற்கும் நீர் ஏதாவது பாடத்திற்கு சமுகமளிக்கவில்லை என்று கருதுவதற்கும் காரணமாக அமையும்;
    (xiii) ஏதாவது காரணத்துக்காக பரீட்சை மேற்பார்வையாளருடன் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவருடன் கதைக்க வேண்டிய அவசியம் ஏற்படின், ஏனையவர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் மேசையில் இருமுறை தட்டுவதன் மூலம் சமிக்ஞை செய்தல் வேண்டும்.

**பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.**

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## அரசாங்க சேவை ஆணைக்குழு

### இலங்கைப் பொறியியல் சேவையின் III ஆம் தரத்திற்கு உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2024

நாடு முழுவதும் அமைந்துள்ள அரசாங்க நிறுவனங்களில் இலங்கை பொறியியலாளர் சேவையின் III ஆம் தரத்தைச் சேர்ந்த சிவில், இயந்திரவியல் மற்றும் மின்னியல் ஆகிய பொறியியல் வகுதிகளுக்குரிய பதவிகளில் நிலவுகின்ற வெற்றிடங்களுக்காக தகைமையுடையவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான திறந்த போட்டிப்பரீட்சை தொடர்பாக அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைப் பிரகாரம் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2025.01.20 ஆகும்.

இதற்கான விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தலானது 2024.12.20 ஆந் திகதி 08.00 மணியிலிருந்து 2025.01.20 ஆந் திகதி 24.00 மணித்தியாலம் வரை www.slida.lk என்ற இணையத் தள வழிமுறையின் (online) மூலம் மட்டுமே மேற்கொள்ளப்படும்.

திறந்த அடிப்படையில் இலங்கைப் பொறியியல் சேவைக்கு உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பதன் மூலம் பூரணப்படுத்த வேண்டிய இலங்கைப் பொறியியலாளர் சேவையின் III ஆம் தர பதவிகளின் தொகை 113 என்பதோடு அது கீழ் காட்டப்பட்டுள்ளவாறு வகுதிகளின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளது.

| *வகுதி* | *வெற்றிடங்களின் எண்ணிக்கை* |
|---|---|
| சிவில் | 87 |
| இயந்திரவியல் | 20 |
| மின்னியல் (கனதி மற்றும் இலகு) | 6 |
| **மொத்தம்** | 113 |

**1. சேவைக்கு ஆட்சேர்க்கும் முறை**

1.1 திறந்த போட்டிப் பரீட்சை தொடர்பாக குறித்த பாடப்பரப்புக்களின் கீழ் கல்வி மற்றும் தொழில்சார் தகைமை பெற்ற பொறியியலாளர்கள் மாத்திரம் இணைத்துக் கொள்ளப்படுவர். நியமனம் அமுல்படுத்தப் படும் திகதி மற்றும் நியமிக்கப்படுகின்ற எண்ணிக்கையினர் பற்றி அரசாங்க சேவை ஆணைக்குழுவின் மூலம் தீர்மானிக்கப்படும். நிலவுகின்ற வெற்றிடங்களின் சிறு தொகையினரை அல்லது அனைத்து வெற்றிடங்களையும் நிரப்புவதற்கு அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கு அதிகாரமுண்டு.

1.2 நியமனம் வழங்குவது தொடர்பாக ஒவ்வொரு வகுதியின் கீழும் கிடைக்கப் பெற்ற விண்ணப்பப் படிவங்களின் எண்ணிக்கையானது அவ் வகுதியின் கீழ் ஆட்சேர்ப்புச் செய்வதற்கு உத்தேசிக்கப்பட்ட வெற்றிடங்களின் எண்ணிக்கையை விட அதிகரிக்கும் சந்தர்ப்பங்களில், எழுத்து மூலப் பரீட்சையின் புள்ளிகளின் ஒழுங்கு முறைப்படி நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு பதவிகளுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளனரா என்பது பற்றி பரீட்சிக்கப்பட்டதன் பின்னரே உத்தியோகத்தர்கள் ஆட்சேர்க்கப்படுவர்.

**2. சேவை நிபந்தனைகள்**

2.1 இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் இல. 1836/6 மற்றும் 2013.11.11 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அரசாங்க சேவை நியமனங்களை நிர்வகிக்கும் பொது நிபந்தனைகளுக்கும் இலங்கைப் பொறியியலாளர் சேவைப் பிரமாணக் குறிப்பில் விதிக்கப்பட்டுள்ள

நியமங்களுக்கும், நிபந்தனைகளுக்கும், அப்பிரமாணக் குறிப்பில் ஏற்கனவே மேற்கொள்ளப் பட்டுள்ளதும், எதிர்வரும் காலங்களில் மேறகொள்ளப்படவுள்ளதுமான திருத்தங்களுக்கும், அரசாங்க சேவை நியமனங்களை நிர்வகிக்கும் பொது நிபந்தனைகளுக்கும், கீழ்ப்பட்டு தெரிவு செய்யப்படும் பரீட்சார்த்தியொருவர் இலங்கை பொறியியலாளர் சேவையின் III ஆம் தரத்திற்கு நியமிக்கப்படுவர்.

2.2 இப்பதவி நிரந்தரமானது. ஓய்வூதியமுடையது. தங்களுக்கு உரித்தான ஓய்வூதியத் திட்டம் தொடர்பாக அரசாங்கத்தினால் தொடர்ந்தேச்சையாக எடுக்கப்படும் கொள்கைசார் தீர்மானங்களுக்கு தாங்கள் உட்படுதல் வேண்டும். மேலும் தாங்கள் விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு / தபுதாரர், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்குப் பங்களிப்புத் தொகை செலுத்துதல் வேண்டும்.

2.3 இப்பதவிக்கு நியமிக்கப்படும் உத்தியோகத்தர்கள் மூன்றாண்டுகள் (03) தகுதிகாண் காலத்திற்குக் கீழ்ப்படுவதுடன், மூன்றாண்டுகளுள் (03) முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியெய்துதல் வேண்டும்.

2.4 2020.10.16 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 18/2020 இன் ஏற்பாடுகள் மற்றும் அதற்கு ஒப்பான சுற்றறிக்கைகளுக்கு ஏற்பாடுகளுக்கு அமைவாக ஏனைய அரசகரும மொழி தொடர்பான தேர்ச்சி மட்டத்தை மூன்றாண்டுகளில் (03) பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். அரச கரும மொழியல்லாத மொழியொன்றின் மூலம் சேவைக்கு இணைத்துக்கொள்ளப்பட்ட உத்தியோகத்தர்களினால் தகுதிகாண் காலத்தினுள் ஒரு அரசகரும மொழி தொடர்பான தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

2.5 அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவைக்கும், அரசாங்க நிதிப் பிரமாணங்களுக்கும், திணைக்களத்தின் அனைத்து கட்டளைகளுக்கும் இப்பதவி உட்பட்டதாகும்.

2.6 நியமனத்தைப் பெறுபவர்கள், இந்நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கு தயாராக இருத்தல் வேண்டும்.

2.7 நியமனம் பெற்றவர்கள், அரசாங்க சேவையைப் போன்றே மாகாண அரசாங்க சேவையிலும் சேவையாற்றுவதற்கு கட்டுப்பட்டவர்களாவர்.

2.8 தாம் நியமிக்கப்படும் பதவியின் கடமைகளை உரிய தினத்தில் பொறுப்பேற்கத் தவறுகின்ற மற்றும் / அல்லது நியமிக்கப்பட்ட பதவியில் அல்லது நியமிக்கப்பட்ட பிரதேசத்தில் கடமையைப் பொறுப்பேற்பதை நிராகரிக்கின்ற அல்லது தவிர்க்கின்ற நியமனம் பெறுநர்களின் நியமனம் இரத்துச் செய்யப்படுவதற்கு இடமுண்டு.

3. **சம்பள அளவுத்திட்டம்**

இப்பதவிக்கு அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 03/2016 ஐக் கொண்ட சம்பள சுற்றறிக்கைக்கு அமைய, SL - 1 - 2016 ரூபா 47,615.00 - 10 x 1,335 - 8 x 1,630 - 17 x 2170 - ரூபா 110,895.00 ஆன (மாதாந்த) சம்பள அளவுத்திட்டம் உரித்துடையதாகும்.

எவ்வாறாயினும், ஆட்சேர்ப்பு செய்யப்படும் சந்தர்ப்பத்தில் பூரண தொழிற் தகைமைகளைப் (பட்டயப் பொறியியலாளர் நிலை) பெற்றுள்ள அல்லது ஆட்சேர்ப்பு செய்யப்பட்டதன் பின்னர் பொறியியலாளராக பூரண தொழிற் தகைமைகளைப் பெற்ற உத்தியோகத்தர் சேவையின் III ஆம் தரத்தின் ஆறாவது (06) சம்பளப் படிமுறையில் அமர்த்தப்படுவர்.

4. **கல்வி மற்றும் தொழில்த் தகைமைகள்**

4.1 **கல்வித் தகைமைகள்** :

4.1.1 பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்ககப் பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் இருந்து, அவ் ஆணைக்குழு மற்றும் இலங்கை பொறியியலாளர் நிறுவகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நான்காண்டு கால (04) முழுநேர பொறியியல் விஞ்ஞானமானி பாடநெறியை ஆட்சேர்க்கப்படும் பாடவிதானத்தின் கீழ் வெற்றிகரமாக பூர்த்தி செய்து பட்டத்தினைப் பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

4.1.2 மேற்படி 4.1.1. இல் குறிப்பிடப்பட்டுள்ள பட்டப் பாடநெறிக்குச் சமமான தகைமையாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் இலங்கை பொறியியலாளர் நிறுவகத்தினால்

அங்கீகரிக்கப்பட்ட கற்கை மற்றும் ஏனைய அனைத்து தேவைகளையும் ஆட்சேர்ப்பு செய்யப்படும் பாட விதானத்தின் கீழ் பூர்த்தி செய்து, அதற்குரிய செல்லுபடியாகும் சான்றிதழைப் பெற்றிருத்தல் வேண்டும்.

4.2 **தொழிற் தகைமைகள்** :

4.2.1 2017 இலக்கம் 04 இனைக் கொண்ட சட்டத்தின் மூலம் ஸ்தாபிக்கப்பட்ட இலங்கை பொறியியலாளர் நிறுவகத்தினால் உரிய சேவை தொகுதியின் கீழ் தொடர்புடைய பொறியியலாளர் ஒருவர் அல்லது பட்டய பொறியியலாளராக பதிவு செய்திருத்தல் மற்றும் இலங்கை பொறியியல் நிறுவகத்தில் உறுப்புரிமை அல்லது முழுமையான உறுப்புரிமையை (பட்டய பொறியியலாளர் நிலைமை) பெற்றிருத்தல்

4.2.2 இலங்கை பொறியியலாளர் நிறுவகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கற்கை அது சம்பந்தமான அங்கத்துவத்தைப் பெற்றுக்கொள்வதற்குத் தகைமை பெற்றுள்ளமை பற்றி உறுதிப்படுத்துவதற்கு அந் நிறுவனத்தினால் வழங்கப்படும் செல்லுபடியான சான்றிதழைப் பெற்றிருத்தல் வேண்டும்.

5. **வயதெல்லை**

5.1 விண்ணப்பம் பொறுப்பேற்கப்படும் இறுதித் திகதியன்று 21 வயதுக்குக் குறையாமலும் 35 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

5.2 அரசாங்க சேவை ஆணைக்குழுவின் சுற்றறிக்கை இலக்கம் 01/2020 இல் குறிப்பிடப்படும் ஏற்பாடுகளின்படி ஒழுக்காற்று தண்டனை பெறாதவர்கள் அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையில் நிரந்தரமாக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவருக்கு அதிகபட்ச வயதெல்லை 45 வருடங்களாகும்.

6. **தேகாரோக்கிய தகைமைகள்**

6.1 எல்லா விண்ணப்பதாரர்களும் இலங்கையின் எப்பாகத்திலும் கடமையாற்றுவதற்கும், பதவிக்குரித்தான கடமைகளை நிறைவேற்றுவதற்கும் எல்லா வகையிலும் தேகாரோக்கியம் உடையவராக இருத்தல் வேண்டும்.

7. **பிற தகைமைகள்**

7.1 விண்ணப்பதாரர்கள் இலங்கைப் பிரசைகளாக இருத்தல் வேண்டும்.

7.2 சிறந்த நன்னடத்தையுடையவர்களாக இருத்தல் வேண்டும்.

7.3 மேலே 4 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளுக்கு உரிய சான்றிதழ்களை வழங்குவதற்கு காரணியாயமைந்த பூரண விபரங்களடங்கிய பெறுபேற்று ஆவணங்களில் (Acadamic transcript) அடங்கியுள்ள பாடங்கள், ஆட்சேர்ப்பு செய்யப்படும் சேவை வகுதிக்கான தேவைப்பாடுளுடன் எல்லா வகையிலும் பொருந்துவதாக இருத்தல் வேண்டும்.

7.4 ஏதேனும் சமயப் பிரிவொன்றின் போதகராக பதவி வகிக்கும் ஒருவர் விண்ணப்பிப்பதற்கு தகைமைபெற மாட்டார்.

7.5 மேலே இல. 5.2 இன் கீழ் தகைமை பெறும் உத்தியோகத்தரொருவர் தமது சேவையில் நிரந்தரம் செய்யப்பட்டு அரசாங்க சேவை ஆணைக்குழுவின் சுற்றறிக்கை இலக்கம் 01/2020 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுளுக்கு அமைவாக தண்டனையொன்றை பெறாதிருத்தல் வேண்டும்.

7.6 விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதிக்கு சேவைக்கு இணைத்துக் கொள்வதற்கு தேவையான அனைத்து தகைமைகள் மற்றும் நிபந்தனைகளை எல்லா விதத்திலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

8. **எழுத்துமூலப் பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சை**

8.1 எழுத்துமூலப் பரீட்சை :

8.1.1 இப்பரீட்சை இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் நடாத்தப்படும்.

8.1.2 மேலே 4 ஆவது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள பொறியியல் விஞ்ஞான கற்கை மூலம் பெற்றுக்கொண்ட அறிவின் அடிப்படையில் விண்ணப்பதாரரின் தர்க்க ரீதியான, பகுப்பாய்வுத் திறன், தீர்மானம் எடுக்கும் திறமை என்பவற்றை கணிக்கும் நோக்கினைக் கொண்டதும் 100 புள்ளிகளைக் கொண்டதுமான எழுத்து மூலப் பரீட்சைக்கு உட்படுத்தப்படுவர். வினாத்தாளானது பல்வகை வினாக்களைக்கொண்டதாக அமைவதோடு, அதற்காக வழங்கப்படும் காலம் 1½ மணித்தியாலங்கள் ஆகும். அனைத்து வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

8.2 **நேர்முகப் பரீட்சை** :

8.2.1 விண்ணப்பதாரர்கள் எழுத்துமூலப் பரீட்சையின் போது பெற்றுக்கொண்ட புள்ளிகளின் அடிப்படையில் நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படுவர்.

8.2.2 இலங்கை பொறியியலாளர் சேவைப் பிரமாணக் குறிப்பினதும் மற்றும் அதற்கமைய வெளியிடப் படும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளப் பூர்த்தி செய்யப்பட்டுள்ளனவா என்பது பற்றியும், உடற்தகைமைகள் பற்றியும் பரீட்சிக்கப்படும்.

8.2.3 இந்த நேர்முகப் பரீட்சைக்கு புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.

8.2.4 அரசாங்க சேவைகள் ஆணைக் குழுவினால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சை சபையின் மூலம் தகைமைகள் பரீட்சிக்கப்படும்.

8.2.5 பரீட்சார்த்தியொருவரினால் நேர்முகப் பரீட்சையின்போது குறித்த சான்றிதழ்கள் மற்றும் ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டியதுடன், அவ்வனைத்து ஆவணங்கள் / சான்றிதழ்கள் எல்லா விதத்திலும் செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும். உரிய அதிகாரியின் தழுவல் அங்கீகாரத்தின் கீழ் சமர்ப்பிக்கப்படும் எந்தவொரு ஆவணமும் / சான்றிதழ்களும் செல்லுபடி யாகாது.

8.2.6 பரீட்சார்த்திகள் பலர் சமமான புள்ளிகளைப் பெற்றிருப்பின் அவ்வாறான சந்தர்ப்பங்களில் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் சுற்றறிக்கை இலக்கம் 01/2024 இல் குறிப்பிடப்படும் கீழ்வரும் ஏற்பாடுகளின்படி செயலாற்ற வேண்டும்.

திறமை ஒழுங்குவரிசைப்படி வெற்றிடங்களை நிரப்பும் ஏதேனும் சந்தர்ப்பத்தில் மிகுதியாகவுள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு அதிகமாக சமமான புள்ளிகளைப் பெற்ற தகைமையுடைய பரீட்சார்த்திகள் இருப்பார்களேயானால் மற்றும் அவ் வெற்றிடங்களை நிரப்புவதற்கு சேவைத் தேவைப்பாடொன்று தற்காலத்திலும் காணப்படுமாக இருப்பின், அவ்வாறு சமமான புள்ளிகளை பெற்ற பரீட்சார்த்திகளிலிருந்து மேலதிக தெரிவொன்றை செய்வதற்கு அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் தீர்மானிக்க முடியும். இத் தெரிவு செய்யும் நடபடிமுறை கீழ்வரும் இரு பகுதிகளை கொண்டமையும்.

i. பரீட்சார்த்திகளின் திறமை மதிப்பீட்டிற்காக எழுத்து மூலப் பரிசோதனை
ii. திறமை அடிப்படையாகக் கொண்ட நேர்முகப் பரீட்சை

எழுத்து மூலப் பரிசோதனை அரசாங்க சேவை ஆணைக்குழு மூலம் அனுமதிக்கின்ற நிறுவனங்களின் மூலம் நடைபெறும்.
நேர்முகப் பரீட்சைக் குழு அரசாங்க ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும்.
இத் தெரிவு செய்யும் நடபடிமுறை, வியூகம் மற்றும் உள்ளடக்கம் தொடர்பில் மேலதிக தகவல்கள் www.psc.gov.lk இன் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையப் பக்கத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

முதல் பக்கம் → தரவிறக்கம் செய்தல் → நடபடிமுறை → விசேட தெரிவு செய்யும் நடபடிமுறை

9. **பரீட்சை நிபந்தனைகள்**

9.1 இப்பரீட்சைக்காக விண்ணப்பம் செய்தல் இணையத்தினூடாக நிகழ்நிலைக்கு (Online) இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் உத்தியோகபூர்வ இணையப் பக்கமான www.slida.lk யிடம் பிரவேசிப்பதினால் மட்டும் செய்ய முடியும். இவ் இணையத்தளத்தில் முதல் பக்கம் "Exam Applications" நீட்சியினூடாக அல்லது நேரடியாக https://examinationportal.slida.lk/என்பதற்கு பிரவேசித்து உங்களினால் பயன்பாட்டு கணக்கொன்றை (User Account) உருவாக்க வேண்டியதுடன் அதன் பின்னர் பரீட்சை விண்ணப்பங்களை பூர்த்தி செய்ய முடியும். நிகழ்நிலை (Online) பரீட்சை விண்ணப்பப் படிவத்தினை ஆங்கில மொழியில் மாத்திரம் பூர்த்தி செய்தல் வேண்டும்.

பரீட்சை விண்ணப்பப்பத்திரத்தை பூர்த்தி செய்யும் 2024.12.20 தினம் 08:00 மணித்தியாலங்களிலிருந்து 2025.01.20 தினம் 24:00 மணித்தியாலயங்கள் வரையான காலப்பகுதிக்குள் மட்டும் செயற்படுத்தலாம்.

9.2 பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் நடாத்தப்படும். பரீட்சார்த்திகள் தாம் விரும்பும் மொழியில் பரீட்சைக்குத் தோற்ற முடியும். பரீட்சார்த்திகள் இப்பரீட்சையில் அனைத்து

வினாத்தாள்களுக்கும் ஒரே மொழியில் விடையளித்தல் வேண்டும். பரீட்சார்த்திகள் தமது விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்ட பரீட்சை மொழி மூலத்தை மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

9.3 பரீட்சைக் கட்டணம் 1,000.00 ரூபாவாகும். அதனை விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் இலங்கையின் எந்தவொரு மக்கள் வங்கி கிளையின் மூலம் பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரின் வங்கிக்கணக்கில் பணத்தை செலுத்த வேண்டும். வங்கிக்கணக்கில் பணம் வைப்புச்செய்யும் பற்றுச்சீட்டில் பண வைப்புப் பற்றுச்சீட்டில் வைப்புச் செய்பவரின் பெயர் மற்றும் தேசிய அடையாள அட்டை இலக்கம் என்பவற்றைக் குறிப்பிட வேண்டிய இடத்தில் விண்ணப்பதாரியின் பெயர் மற்றும் தேசிய அடையாள அட்டை இலக்கம் என்பவற்றை உள்ளடக்குதல் வேண்டும்.

**குறிப்பு** : பணம் வைப்பிலிடும்போது பின்வரும் தகவல்களை நிதிவைப்புப் பற்றுச்சீட்டில் (Cash Deposit Slip ) உள்ளடக்கவும்.

| | | |
|---|---|---|
| கணக்கு வைத்திருப்பவரின் பெயர் | : | செயலாளர், பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு |
| கணக்கு இலக்கம் | : | 310-1-001-1-9027430 |
| கிளை | : | பம்பலபிட்டிய கிளை |

9.4 விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும் செயற்பாடு சம்பந்தமாக ஏதேனும் சிக்கல்கள் ஏற்படுமிடத்து அது சம்பந்தமாக தொடர்பு கொள்வதற்காக இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் 011-5980236 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு 2024.12.20 ஆம் திகதியிலிருந்து 2025.01.20 ஆம் திகதி வரை வார அலுவலக நாட்களில் மு.ப. 8.00 மணித்தியாலங்களிலிருந்து 16.15 மணித்தியாலயங்கள் வரை தொடர்பு கொள்வதற்காக திறந்திருக்கும்.

9.5 நிகழ்நிலையினூடாக விண்ணப்பங்களை பூர்த்தி செய்யும் போது விண்ணப்பதாரியிடம் செயற்படும் மின்னஞ்சல் முகவரியொன்றும் (e-mail) மற்றும் கையடக்க தொலைபேசி இலக்கமொன்றும் இருப்பது கட்டாயமாகும். விண்ணப்பத்திரத்தை நிகழ்நிலையினூடாக சமர்பித்த பின்பு, அது கிடைக்கப்பெற்ற தென்பதை உறுதிப்படுத்தும் தகவலொன்று மின்னஞ்சல் முகவரிக்கு மற்றும் கையடக்க தொலைபேசி இலக்கத்திற்கு அனுப்பப்படும்.

விண்ணப்பங்களை பரிசோதித்து முடிவடைந்த பின்பு, உங்களால் உருவாக்கப்பட்ட பயன்பாட்டு கணக்கில் பிரவேசித்து பரீட்சை அடையாள அட்டையை தரவிறக்கம் செய்ய முடியும். அது தொடர்பில் குறுஞ்செய்தி (SMS) மூலம் உங்களுக்கு அறிவிக்கப்படும்.

9.6 அந்த அனுமதி அட்டையை அச்சிட்டு அரசாங்க சேவையில் / மாகாண அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்களால் தமது திணைக்கள / நிறுவன தலைவரினூடாகவும் அவ்வாறில்லாத விண்ணப்பதாரர்கள் தமது கையொப்பத்தினை அரசாங்கப் பாடசாலை ஒன்றின் அதிபரொருவர்/ ஓய்வு பெற்ற உத்தியோகத்தரொருவர், தொகுதியின் கிராம அலுவலர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளரொருவர், சட்டத்தரணியொருவர், பிரசித்தி பெற்ற நொத்தாரிசு ஒருவர், முப்படையின் அதிகாரம் பெற்ற அலுவலர் ஒருவர், அரசாங்கத்தில்/ மாகாண அரசாங்க சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் நிர்வாக தரத்திலுள்ள உத்தியோகத்தரொருவர் அல்லது பௌத்த விகாரையின் தலைமைத் தேரர் அல்லது தலைமை தேரர் அல்லது பிற மதங்களைச் சேர்ந்த சமயத்தலங்களுக்குப் பொறுப்பான பதவியிலுள்ள ஒருவரினால் பரீட்சை அனுமதி அட்டையில் தமது கையொப்பத்தினை உறுதிப் படுத்துதல் கட்டாயமாகும்.

9.7 பரீட்சை தொடர்பாக செலுத்திய பணம் எக்காரணம் கொண்டும் மீள செலுத்தப்படமாட்டாது.

9.8 விண்ணப்பத்தில் குறிப்பிடப்படும் விண்ணப்பதாரியை தொடர்பு கொள்ளும் வழிவகைகளான கைத்தொலைபேசி இலக்கம் மற்றும் மின்னஞ்சல் முகவரியை இணைத்துக் கொள்ளும் செயற்பாடு

முடிவடையும் வரையிலும் செயற்பாட்டில் கொண்டு செல்வது விண்ணப்பதாரியின் பொறுப்பாகும். அக் கையடக்க தொலைபேசி இலக்கம் மற்றும் மின்னஞ்சல் முகவரியினை மாற்றுவதினால் ஏற்படும் அசௌகரியங்களுக்கு பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு பொறுப்பாகாது.

9.9 அனுமதி அட்டை இன்றி பரீட்சை மண்டபத்துக்கு நுழைவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது. பரீட்சை ஆரம்பமாகும் திகதியில் பரீட்சை மேற்பார்வையாளரிடம் தமது கையொப்பம் உறுதிபடுத்தப்பட்ட அனுமதியட்டை சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

**கவனிக்கவும்** : பரீட்சார்த்தி ஒருவருக்கு நுழைவுச்சீட்டு வழங்கப்படுவது என்பது அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான சகல தகைமைகளையும் கொண்டுள்ளார் என கருதப்படலாகாது.

9.10 மேலும் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தினால் கேட்கப்படும் ஏதாவது தகவல்களை உறுதிபடுத்துவதற்காக தம் வசமுள்ள பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டு பெற்றுக்கொண்ட பற்றுச் சீட்டைத் தயாராக வைத்திருப்பது பிரயோசனமாக அமையும். அதனைக் கேட்கும் பட்சத்தில் ஆவணங்களை சமர்ப்பிப்பதற்கு தவறினால் பரீட்சார்த்தியின் பரீட்சை நுளைவானது இரத்துச்செய்யப்படும்.

9.11 அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் அங்கீகாரத்தின் பேரில் பரீட்சையை நடாத்துதல், பிற்போடுதல் அல்லது இரத்து செய்வதற்கான அதிகாரம் அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகம் அவர்களுக்கு உண்டு.

9.12 பரீட்சை நடாத்துதல் மற்றும் பெறுபேறு வெளியிடுதல் என்பன தொடர்பில் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்ட விதிகளுக்கும், ஒழுங்குவிதிகளுக்கும் பரீட்சார்த்திகள் கட்டுப்படுதல் வேண்டும். அத்துடன் அவை மீறப்படும் பட்சத்தில் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு பரீட்சார்த்திகள் ஆளாக நேரிடும்.

9.13 **விணணப்பதாரரின் ஆளடையாளம்** :

பரீட்சார்த்தி ஒருவர் தான் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் மேற்பார்வையாளர் திருப்தியுறும் வண்ணம் பரீட்சை மண்டபத்தில் தனது ஆளடையாளத்தினை நிரூபிக்குமாறு கோரப்படுவார். பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும்

I. தேசிய ஆள் அடையாள அட்டை
II. செல்லுபடியாகும் கடவுச்சீட்டு
III. செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்

அத்தோடு பரீட்சாத்திகளின் அடையாளத்தை உறுதிப்படுத்த இயலும் வகையில் முகம் மற்றும் இரு காதுகளையும் மூடாத வகையில் பரீட்சை மண்டபத்திற்கு உள்நுழைதல் வேண்டும். அத்தோடு, தமது அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கு நிராகரிக்கும் விண்ணப்பதாரிகள் பரீட்சை மண்டபத்திற்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும், பரீட்சை மண்டபத்திற்கு உள்நுழைந்த சந்தர்ப்பத்திலிருந்து பரீட்சை முடிவடைந்து அதிலிருந்து வெளியேறும் வரையிலும் பரீட்சை அதிகாரிகளுக்கு விண்ணப்பதாரியினை அடையாளம் காணும்படி முகம் மற்றும் இரு காதுகளையும் மூடாத வகையில் இருப்பது அவசியம்.

10. **பொய்யான தகவல்களை வழங்குவதற்கான தண்டனை**

யாரேனும் ஒரு விண்ணப்பதாரி தகைமைகள் அற்றவர் என நிரூபிக்கப்பட்டால் பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும் காலத்தில் அல்லது பரீட்சையின் பின்னர் எந்த நேரத்திலும் அவரது விண்ணப்பத்தினை நிராகரிப்பதற்கு இடமுண்டு. விண்ணப்பதாரரால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஏதாவது ஒரு விடயம் பொய்யானது என

தெரிந்தே சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக தெரியவரின், அவ்வாறின்றி ஏதாவது முக்கிய விடயம் அவரால் வேண்டுமென்றே மறைத்திருப்பின் அவரை சேவையிலிருந்து நீக்குவதற்கும் இடமுண்டு. அவ்வாறே அவ்வேளையிலும் அவருக்கு வேதனம் அல்லது வேறு ஊதியமாக அரசாங்கத்தினால் செலுத்தப்பட்டிருப்பின் அந்த பணம் முழுவதையும் அவரிடமிருந்து மீளப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

11. அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அலுவலக நடைமுறை விதிகள், காலத்துக்குக் காலம் அரசாங்க சேவை சம்பந்தமாக வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகள் மற்றும் இலங்கைப் பொறியியல் சேவைப் பிரமாணக் குறிப்பு மற்றும் அதில் மேற்கொள்ளப்பட்டுள்ள திருத்தங்களிலுள்ள நிபந்தனைகள் ஆகியன இப்பதவிக்கு ஏற்புடையனவாகும்.

12. அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் பெறுபேறு வெளியிடப்படும் திகதியை அறிவித்து அனுப்பிய பிறகு, எழுத்துமூலப் பரீட்சையில் பெற்ற புள்ளிகள் அடங்கிய பெறுபேறு பரீட்சை எழுதிய அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும் அனுப்பிவைப்பதற்கு இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் நடவடிக்கை எடுக்கப்படும்.

13. இந்த ஒழுங்கு விதிகளுக்குட்படாத ஏதாவது விடயங்கள் இருப்பின் அது பற்றி அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அறிவுறுத்தல்களுக்கிணங்க, பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரின் தீர்மானத்தின் படி நடவடிக்கை எடுக்கப்படும்.

14. இந்த வர்த்தமானி அறிவித்தலில் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் பிரசுரிக்கப்படும் என்பதுடன் ஏதேனும் பொருத்தமின்மை ஏற்படின் அல்லது ஏதேனும் முரண்பாடு ஏற்படின் சிங்கள மொழியிலான அறிவித்தலே வலுவுள்ளதாதல் வேண்டும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளையின் பிரகாரம்,

எஸ்.ஆலோகபண்டார,
செயலாளர்,
பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும்
உள்ளூராட்சி அமைச்சு.

பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07,
2024, திசெம்பர் 11.

12-271

## கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு

நான்கு முன் சேவை கல்விமாணி ( ஆங்கில மொழிமூலம்) பட்டப் பாடநெறியைத் தொடர்வதற்காக 2023 ஆம் ஆண்டிற்குரிய க.பொ.த. ( உ./த.) பெறுபேறுகளின் அடிப்படையில் 210 பயிலுனர்களை குளியாப்பிட்டி, தேசிய தொழில்நுட்பக் கல்வியியல் கல்லூரிக்கு அனுமதித்தல் - 2025

1.0 தேசிய தொழில்நுட்பக் கல்வியியல் கல்லூரியில் நான்கு வருட முன்சேவை கல்விமாணி (ஆங்கில மொழிமூலம்) பட்டப் பாடநெறியொன்றைத் தொடர்வதற்காக ஆட்சேர்ப்பதற்கு அவசியமான கல்வித் தகைமைகள் மற்றும் தகுதிகளுடன் கூடிய விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பப் படிவங்கள் கோரப்படுகின்றன.

1.1 2023 ஆம் ஆண்டிற்குரிய க.பொ.த. (உ.த.) பரீட்சைக்குத் தோற்றி 4.0 இல் குறிப்பிடப்பட்டுள்ள பிரதானமான மூன்று (03) பாடங்களில் ஒரே தடவையில் சித்தியடைந்த விண்ணப்பதாரர்கள் மாத்திரம் இதற்காக விண்ணப்பிக்க முடியும்.

1.2 அனைத்து விண்ணப்பதாரர்களும் நிகழ்நிலை முறைமையூடாக (Online System) வர்த்தமானி அறிவித்தலின் 9.0 இல் “விண்ணப்பிப்பதற்கான ஆலோசனைகள்” எனும் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள ஆலோசனைகளுக்கு அமைவாக விண்ணப்பிக்க வேண்டும்.

1.3 வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட திகதியிலிருந்து 2025/01/10 ம் திகதி அல்லது அதற்கு முன்னராக விண்ணப்பிக்க வேண்டும்.

1.4 வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து விடயங்களையும் நன்கு வாசித்து புரிந்துகொண்டு அதன் படி நிகழ்நிலை மூலமாக (Online) விண்ணப்பிக்கும் பொறுப்பு விண்ணப்பதாரரைச் சாரும். குறிப்பிடப்பட்ட காலப்பகுதிக்குள் சரியாக சமர்ப்பிக்கப்படாத விண்ணப்பப் படிவங்கள் தொடர்பில் பின்னராக கிடைக்கப்பெறும் கோரிக்கைகள் எவையும் கருத்தில் கொள்ளப்படமாட்டாது.

1.5 விண்ணப்பிக்க முன்னர் வர்த்தமானி அறிவித்தலின் 12.0 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு பாடநெறிகளுக்கும் 2023 ஆம் ஆண்டுக்குரிய க.பொ.த. (உ.த.) பெறுபேறுகளின் அடிப்படையில் ஆட்சேர்க்கப்படும் விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டு மாவட்ட அடிப்படையிலும் தேசிய அடிப்படையிலும் நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கை தொடர்பில் தெளிவான புரிதலொன்றைப் பெற்றுக் கொண்ட பின்னர் விண்ணப்பிக்க வேண்டும்.

2.0 **தகைமைகள்**

அனைத்து விண்ணப்பதாரர்களும்-

2.1 இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.

2.2 சிறந்த குணவியல்புடையவராகவும், சிறந்த உடல் மற்றும் உள ஆரோக்கியத்துடனும் இருத்தல் வேண்டும்.

2.3 2024/01/01 ஆம் திகதிக்கு வயது 25 ஐ தாண்டாதவராக இருத்தல் வேண்டும்.

2.4 திருமணமாகாதவராக இருத்தல் வேண்டும்.

3.0 **அடிப்படைக் கல்வித் தகைமைகள்**

3.1 பாடநெறிகளுக்கு விண்ணப்பிக்கும் அனைத்து விண்ணப்பதாரர்களும் கல்வியியல் கல்லூரி அனுமதிக்காக விண்ணப்பிக்கும் போது கீழே தரப்பட்டுள்ள 3.2 மற்றும் 3.3 இல் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படைக் கல்வித் தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் கட்டாயமாகும்.

3.2 2023 ஆம் ஆண்டிற்குரிய க.பொ.த. (உ.த.) பரீட்சையில் 4.0 இல் குறிப்பிடப்பட்டுள்ள மூன்று (03) பிரதான பாடங்களிலும் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல்.

3.3 விண்ணப்பதாரர்கள் க.பொ.த. (சா.தர) பரீட்சையில் ஊடக மொழி (சிங்கள மொழி/ தமிழ் மொழி) மற்றும் கணிதம் உட்பட ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும் என்பதுடன், மூன்று (03) பாடங்களில் திறமைச் சித்தி பெற்றிருப்பது கட்டாயமாகும். இந்த தகைமைகளை இரண்டு தடவைகளில் பூர்த்தி செய்வதாயின், பரீட்சைக்குத் தோற்றிய முதல் தடவையில் ஊடக மொழி (சிங்கள மொழி/ தமிழ்

மொழி) உட்பட ஐந்து (05) பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும் என்பதுடன், மூன்று (03) திறமைச் சித்திகளைப் பெற்றிருப்பது கட்டாயமாகும். அத்துடன் க.பொ.த. (சா.தர) பரீட்சையில் ஆங்கில மொழி அல்லது ஆங்கில இலக்கியத்தல் சாதாரண தர சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

3.4 ஒவ்வொரு பாடநெறிகளுக்கும் அவசியமான விசேட தகைமைகள் அந்தந்தப் பாடநெறிகளின் கீழ் தரப்பட்டுள்ளன.

**கருத்தில் கொள்ளவும்:-**

(அ) க.பொ.த (சா.தரா) பாடத் திட்டத்தின் கீழ், கீழே குறிப்பிடப்பட்டுள்ள பாடங்கள் கருத்தில் கொள்ளப்படும்.

பிரதான பாடம் :-
(i) சமயம் (ii) சிங்கள மொழியும் இலக்கியமும்/ தமிழ் மொழியும் இலக்கியமும்
(iii) ஆங்கில மொழி (iv) கணிதம் (v) வரலாறு (vi) விஞ்ஞானம்

தொகுதிப் பாடங்கள் :-
(i) முதலாவது பாடத் தொகுதிக்குரிய பாடங்களில் ஏதேனுமொரு பாடம்
(ii) இரண்டாம் பாடத் தொகுதிக்குரிய பாடங்களில் ஏதேனுமொரு பாடம்
(iii) மூன்றாவது பாடத் தொகுதிக்குரிய பாடங்களில் ஏதேனுமொரு பாடம்

3.5 தகைமைகளை உறுதிப்படுத்துவதற்காக சமர்ப்பிக்கப்படும் அனைத்து கல்வி மற்றும் ஏனைய சான்றிதழ்களின் செல்லுபடியாகும் திகதியானது விண்ணப்பிப்பதற்கான இறுதித் திகதியான 2025 /01/10 அல்லது அதற்கு முந்தைய திகதியொன்றாக இருத்தல் வேண்டும்.

**4.0 ஒவ்வொரு பாடநெறிகளுக்கும் அவசியமான தகைமைகள்**

கீழே குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் தங்களது விசேட கவனத்தை செலுத்துவது முக்கியமாகும்.

**கருத்தில் கொள்ளவும்:-**

(அ) வர்த்தமானி அறிவித்தலில் தரப்பட்டுள்ள ஒவ்வொரு பாடநெறிகளுக்கும் அவசியமான தகைமைகள் தொடர்பில் மிகவும் தெளிவான புரிதலைப் பெற்று விண்ணப்பித்தல் வேண்டும்.

(ஆ) மேலே 3.0 இன் 3.2 மற்றும் 3.3 இல் கல்வியியல் கல்லூரியில் அனுமதி பெற்றுக் கொள்வதற்காக விண்ணப்பிப்பதற்கு க.பொ.த (உ.த.) மற்றும் (சா.த.) ஆகிய பரீட்சைகளில் பூரணப்படுத்தப்பட வேண்டிய ஆகக் குறைந்த அடிப்படைக் கல்வித் தகைமைகள் தரப்பட்டுள்ளன. அவற்றுக்கு மேலதிகமாக ஒவ்வொரு பாடநெறிகளுக்கும் விசேடமாக பூரணப்படுத்த வேண்டிய பாடங்களின் தேர்ச்சி தொடர்பில் அவ் அப் பாடநெறிகளின் கீழ் தரப்பட்டுள்ளன.

(இ) வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள செயன்முறையின் படி விண்ணப்பதாரர்களின் க..பொ.த. உயர் தரப் பரீட்சையில் பெற்றுக் கொண்ட Z புள்ளியின் வரிசைப்படி நேர்முகப் பரீட்சைக்கு விண்ணப்பதாரர்கள் அழைக்கப்படுவர்.

(ஈ) பாடநெறிக்கு ஆட்சேர்ப்பு செய்யப்படும் மொத்த எண்ணிக்கையிலிருந்து உரிய வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு சமமான எண்ணிக்கையிலான விண்ணப்பதாரர்கள் நிகழ்நிலைத் தரவு முறைமை ஒன்றில் தகவல்களிலிருந்து கணினி நிகழ்ச்சித்திட்டம் ஒன்றினூடாக தெரிவு செய்யப்பட்டு சான்றிதழ்கள் மற்றும் தகுதிகளை பரிசோதிப்பதற்கான நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு அவர்களிலிருது தகுதிகளின் வரிசைப்படி உரிய எண்ணிக்கையிலான விண்ணப்பதாரர்கள் தெரிவு செய்யப்படுவர்.

(உ) தேசிய தொழில்நுட்பக் கல்வியியல் கல்லூரியில் காணப்படும் ஒவ்வொரு பாடநெறிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்குரித்தான கல்வித் தகைமைகள் மற்றும் ஏனைய விசேட தகைமைகள் கீழே தரப்பட்டுள்ளன.

**பாடநெறி இலக்கம் 01 - பொறியியல் தொழில்நுட்பவியல்**

4.1.

4.1.1 2023 ஆம் ஆண்டிற்குரிய க.பொ.த (உ.த.) பரீட்சையில் பொறியியல் தொழில்நுட்பவியல், தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் பாடத்துறைக்குரிய பாடமாக அனுமதிக்கப்பட்டுள்ள பாடங்களுள் ஒரு பாடம் உட்பட மூன்று (03) பாடங்களில் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல்.

அல்லது

4.1.2 2023 ஆம் ஆண்டிற்குரிய க.பொ.த. (உ.த.) பரீட்சையில் பௌதீகவியல் பாடத்துறையின் கீழ் இணைந்த கணிதம், பௌதீகவியல், இரசாயனவியல் ஆகிய மூன்று (03) பாடங்களில் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல்.

அல்லது

4.1.3 2023 ஆம் ஆண்டிற்குரிய க.பொ.த (உ.த.) பரீட்சையில் வேறு பாடத்துறை ஒன்றின் கீழ் இணைந்த கணிதம் அல்லது உயர் கணிதம் மற்றும் பௌதீகவியல் ஆகிய பாடங்களுள் இரண்டு உட்பட மூன்று (03) பாடங்களில் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல்.

மற்றும்

4.1.4 3.0 இல் 3.3 இற்குரிய தகைமைகளுடன் க.பொ.த (சா.த.) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

- **தெரிவு செய்வதற்கான முன்னுரிமை வரிசை**

இப் பாடநெறிக்கு ஆட்சேர்ப்பு செய்யப்படும் மொத்த எண்ணிக்கையின் 60% சதவீதமானோர் 4.1.1 இன் கீழ் விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரர்களில் இருந்தும், 30% சதவீதமானோர் 4.1.2 இன் கீழ் விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரர்களில் இருந்தும், 10% சதவீதமானோர் 4.1.3 இன் கீழ் விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரர்களில் இருந்தும் என்பதாக தகைமைகளின் வரிசைப்படி தெரிவு செய்யப்படுவர். ஏதேனும் ஒரு பாடத்துறையின் கீழ் போதியளவு எண்ணிக்கையில் தகுதி பெற்றவர்கள் இல்லாத சந்தர்ப்பங்களில் 4.1.1, 4.1.2, 4.1.3 ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளின் வரிசை அடிப்படையில் முன்னுரிமை கிடைக்கும் வகையில் மீதி எண்ணிக்கை வெற்றிடங்கள் நிரப்பப்படும்.

**பாடநெறி இலக்கம் 02 - உயிர்முறைமைகள் தொழில்நுட்பவியல்**

4.2.

4.2.1 2023 ஆம் ஆண்டிற்குரிய க.பொ.த. (உ.த.) பரீட்சையில் உயிர் முறைமைகள் தொழில்நுட்பவியல், தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் பாடத்துறைக்குரிய மூன்றாம் பாடமாக அனுமதிக்கப்பட்டுள்ள பாடங்களில் ஒரு பாடம் உட்பட மூன்று (03) பாடங்களில் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல்.

அல்லது

4.2.2 2023 ஆம் ஆண்டிற்குரிய க.பொ.த. (உ.த.) பரீட்சையில் உயிரியல் பாடத்துறையின் கீழ் உயிரியல், பௌதீகவியல்/ விவசாய விஞ்ஞானம், இரசாயனவியல் ஆகிய பாடங்களில் மூன்று (03) பாடங்களில் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல்.

அல்லது

4.2.3 2023 ஆம் ஆண்டிற்குரிய க.பொ.த (உ.த.) பரீட்சையில் வேறு பாடத்துறை ஒன்றின் கீழ் உயிரியல், பௌதீகவியல், விவசாய விஞ்ஞானம், இரசாயனவியல் ஆகிய பாடங்களில் இரண்டு பாடங்கள் உட்பட மூன்று (03) பாடங்களில் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல்.

மற்றும்

4.2.4 3.0 இன் 3.3 இற்குரிய தகைமைகளுடன் க.பொ.த. (சா.த.) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

- **தெரிவு செய்வதற்கான முன்னுரிமை வரிசை**

இப் பாடநெறிக்கு ஆட்சேர்ப்பு செய்யப்படும் மொத்த எண்ணிக்கையின் 60% சதவீதமானோர் 4.2.1 இன் கீழ் விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரர்களில் இருந்தும், 30% சதவீதமானோர் 4.2.2 இன் கீழ் விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரர்களில் இருந்தும், 10% சதவீதமானோர் 4.2.3 இன் கீழ் விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரர்களில் இருந்தும் என்பதாக தகைமைகளின் வரிசைப்படி தெரிவு செய்யப்படுவர். ஏதேனும் ஒரு பாடத்துறையின் கீழ் போதியளவு எண்ணிக்கையில் தகுதி பெற்றவர்கள் இல்லாத சந்தர்ப்பங்களில் 4.2.1, 4.2.2, 4.2.3 ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளின் வரிசை அடிப்படையில் முன்னுரிமை கிடைக்கும் வகையில் மீதி எண்ணிக்கை வெற்றிடங்கள் நிரப்பப்படும்.

**பாடநெறி இலக்கம் 03 - தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம்**

4.3.

4.3.1 2023 ஆம் ஆண்டிற்குரிய க.பொ.த. (உ.த.) பரீட்சையில் பிரதான பாடமொன்றாக தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப பாடத்துடன் வேறு ஏதேனும் இரண்டு பாடங்கள் உட்பட மூன்று (03) பாடங்களில் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல்.

மற்றும்

4.3.2 3.0 இன் 3.3 இற்குரிய தகைமைகளுடன் க.பொ.த. (சா.த.) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

**கருத்தில் கொள்ளவும்:-**

ஆட்சேர்ப்பு செய்யும் போது விண்ணப்பதாரர்கள், அவர்கள் க.பொ.த உயர் தரப் பரீட்சையின் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பப் பாடத்தில் பெற்றுள்ள தேர்ச்சி மற்றும் அப் பாடத்தில் பெற்றுக் கொண்ட புள்ளிகளின் முன்னுரிமை அடிப்படையில் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

- **தெரிவு செய்வதற்கான முன்னுரிமை வரிசை**

(i) நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் விண்ணப்பதாரர்களிலிருந்து க.பொ.த உயர் தரப் பரீட்சையில் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப பாடத்திற்கு A சித்தி பெற்றுள்ள விண்ணப்பதாரர்கள் பாடத்தில் பெற்றுள்ள புள்ளிக்கு முன்னுரிமை வழங்கி தெரிவு செய்யப்படும்.

(ii) அதன் பின்னர் தொடர்ந்தும் வெற்றிடங்கள் நிலவும் பட்சத்தில் அவற்றிற்காக க.பொ.த. உயர் தரப் பரீட்சையில் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப பாடத்திற்கு B சித்தி பெற்றுள்ள விண்ணப்பதாரர்கள் பாடத்தில் பெற்றுள்ள புள்ளிக்கு முன்னுரிமை வழங்கி தெரிவு செய்யப்படும்.

(iii) மேலே இலக்கம் (ii) இன் கீழ் தெரிவு செய்த பின்னரும் தொடர்ந்தும் வெற்றிடங்கள் நிலவும் பட்சத்தில் அவற்றிற்காக க.பொ.த. உயர் தரப் பரீட்சையில் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப பாடத்திற்கு C சித்தி பெற்றுள்ள விண்ணப்பதாரர்கள் பாடத்தில் பெற்றுள்ள புள்ளிக்கு முன்னுரிமை வழங்கி தெரிவு செய்யப்படும்.

## 5.0 பயிலுநர்களைத் தெரிவு செய்வதற்கான நடைமுறை

5.1 தெரிவு செய்வதற்கான அடிப்படை :

5.1.1 2023ம் ஆண்டிற்குரிய க.பொ.த. (உ.த) பரீட்சையில் சித்தியடைந்த விண்ணப்பதாரர்களுக்கு 2028ம் ஆண்டில் ஆசிரியர்கள் ஓய்வு பெறுவதால் பாடசாலை முறைமையினுள் ஏற்படக்கூடிய ஆசிரியர் வெற்றிடங்களின் எண்ணிக்கை மற்றும் தற்போது நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களும், கஷ்டப் பிரதேசங்களில் பாடங்களின் பல்வகைமையை ஏற்படுத்த வேண்டிய தேவை தொடர்பிலும் கருத்தில் கொள்ளப்பட்டு பாட மட்டத்தில் ஆசிரியர்களின் தேவைகள் கணிப்பிடப்பட்டுள்ளதுடன் அவ் எண்ணிக்கையினை 2025 ஆம் ஆண்டில் பயிலுனர்களுக்காக கல்வியியல் கல்லூரியினுள் ஒரே தடவையில் வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கக் கூடிய எண்ணிக்கையுடன் ஒப்பிட்டு ஆட்சேர்ப்பு செய்யப்படும் பயிலுனர்களின் எண்ணிக்கை தீர்மானிக்கப்பட்டுள்ளது.

5.1.1.1 ஆட்சேர்ப்பு செய்யப்படும் எண்ணிக்கையின் மீது தாக்கம் செலுத்தக் கூடிய பிரதானமான காரணியாக இருப்பது ஒவ்வொரு பாடநெறிக்கும் கல்வியியல் கல்லூரியினுள் வசதிகள் வழங்கப்படக்கூடிய மாணவர் எண்ணிக்கையாகும்.

5.1.1.2 அதற்கமைய 2023 ஆம் ஆண்டிற்குரிய க.பொ.த. (உ.த) பெறுபேறுகளின் அடிப்படையில் 2025 ஆம் ஆண்டிற்கான ஆட்சேர்ப்புக்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு மேற்கொள்ளப் படும்.

(i) ஆட்சேர்ப்பு செய்யப்படவுள்ள மொத்த வெற்றிடங்களின் எண்ணிக்கையில் 50% சதவீதம் மாவட்ட அடிப்படையிலும் மீதி 50% சதவீதம் தேசிய அடிப்படையிலும் ஆட்சேர்ப்பு செய்யப்படும். தேசிய மற்றும் மாவட்ட அடிப்படைக்காக வெற்றிடங்களை ஒதுக்கும் போது தேசிய அடிப்படைக்கு முன்னுரிமையளிக்கப்படும்.

(ii) வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஏதேனும் ஒரு பாடநெறிக்குரிய மொழி மூலத்தில் உரிய மாவட்டங்களிலிருந்து ஆட்சேர்ப்பு செய்யப்படுவதற்காக அறிவிக்கப்பட்டுள்ள எண்ணிக்கை, மாவட்ட அடிப்படையில் விண்ணப்பதாரர்கள் பெற்றுள்ள Z புள்ளிகளின் வரிசையுடன் வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய தகைமைகளையும் முறையாக தொடர்புபடுத்தி, 4.0 இல் “கருத்தில் கொள்ளவும்” எனும் பந்தியிலும் உரிய பாடநெறிகளின் கீழ் தரப்பட்டுள்ள செயன்முறைகளுக்கும் அமைவாக ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும்.

(iii) மாவட்ட அடிப்படையில் வெற்றிடங்களை நிரப்பியதன் பின்னர் தேசிய மட்ட வெற்றிடங்களுக்காக தெரிவு செய்யப்படும். அதன் போது மீதியாக உள்ள விண்ணப்பதாரர்களிடையே நாட்டில் அதி கூடிய Z புள்ளிகளைப் பெற்றுள்ள வரிசையுடன் வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய தகைமைகளையும் முறையாக தொடர்புபடுத்தி, 4.0 இல் “கருத்தில் கொள்ளவும்” எனும் பந்தியிலும் உரிய பாடநெறிகளின் கீழ் தரப்பட்டுள்ள செயன்முறைகளுக்கும் அமைவாக ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும்

(iv) வெற்றிடங்களை நிரப்பியதன் பின்னர் மாவட்ட அடிப்படையில் வெற்றிடமொன்று ஏற்படும் பட்சத்தில் தேசிய அடிப்படையின் கீழ் தெரிவு செய்யப்பட்டுள்ள விண்ணப்பதாரர்களைக் கொண்டு அம் மாவட்டத்தின் தகைமை வரிசை மற்றும் விருப்பிற்கு அமைய மாவட்ட வெற்றிடங்கள் நிரப்பப்படும். அதன் போது தேசிய மட்டத்தில் வெற்றிடமொன்று ஏற்படும் பட்சத்தில் குறித்த வெற்றிடம் தேசிய மட்டத்தில் நிரப்பப்படும்

5.1.2 உரிய மாகாணத்தில் அல்லது தேசிய அடிப்படையில் ஒரே Z புள்ளியைப் பெற்றுள்ள ஒன்றிற்கு மேற்பட்ட மாணவர்களிலிருந்து ஒரு மாணவரை தெரிவு செய்ய வேண்டி ஏற்படும் பட்சத்தில்

முதலாவது தடவை க.பொ.த. (சா.த.) பரீட்சையில் 3.0 இன் 3.5 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பிரதானமான ஆறு (06) பாடங்களிலும் பெற்றுக் கொண்ட புள்ளிகள் கருத்தில் கொள்ளப்படும்.

அதன் படி க.பொ.த (சா.த) பரீட்சையின் பெறுபேறில் ஒரு விசேட சித்திக்கு 4 புள்ளிகளும், ஒரு அதி திறமைச் சித்திக்கு 3 புள்ளிகளும், ஒரு திறமைச் சித்திக்கு 2 புள்ளிகளும், சாதாரண சித்தியொன்றிற்கு 1 புள்ளி வீதமும் புள்ளி வழங்கப்பட்டு குறித்த மொத்தப் புள்ளிகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் தெரிவுசெய்யப்படும்.

5.1.3 மாவட்ட அடிப்படையில் தெரிவு செய்யும் போது ஏதேனுமொரு பாடநெறிக்கு ஏதேனுமொரு மாவட்டத்தின் கீழுள்ள மொத்த தரவு அடிப்படையினுள் தகைமைகளைப் பூரணப்படுத்திய விண்ணப்பதாரர்கள் போதியளவு எண்ணிக்கையில் இல்லாத சந்தர்ப்பத்தில், அம் மாவட்டம் உரித்தாகும் மாகாணத்தின் கீழ் விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரர்களது உரிய திறமை வரிசையும், அதுவும் போதியளவு எண்ணிக்கையில் இல்லை எனின் அகில இலங்கை திறமை வரிசையையும் கருத்தில் கொண்டு குறித்த எண்ணிக்கையிலான வெற்றிடங்கள் நிரப்பப்படும்

**5.2 நிரந்தர வதிவிடத்தை தீர்மானித்தல்** :

5.2.1 விண்ணப்பதாரரின் நிரந்த வதிவிட மாவட்டம்/ மாகாணம் கீழே குறிப்பிடப்பட்டுள்ள செயன்முறைக்கமைய தீர்மானிக்கப்படும்.

5.2.1.1 மாவட்ட அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யும் போது விண்ணப்பதாரர் விண்ணப்பிக்கும் மாவட்டம் அவர் முதன் முதலில் க.பொ.த (உ,த) பரீட்சைக்குத் தோற்றிய வருடம் மற்றும் அதற்கு முந்திய இரண்டு வருடங்களில் நிரந்தரமாக வதிந்துள்ள மாவட்டமாகும்.

5.2.1.2 இதன் போது விண்ணப்பதாரர் முதல் தடவையாக அல்லது அதற்குப் பின்னர் ஒரு தடவையில் க.பொ.த (உ.த) பரீட்சைக்குத் தோற்றிய பாடசாலை உரித்தான, விண்ணப்பதாரர்களது நிரந்தர வதிவிடமல்லாத மாவட்டம்/ தனிப்பட்ட வதிகளைக் கருத்தில் கொண்டு உரிய காலப் பகுதியினுள் தற்காலிகமாக வதிந்த மாவட்டம்/ தற்போது வதிவிடத்தை வேறு மாவட்டம் ஒன்றிற்கு மாற்றியிருப்பின் அந்த மாவட்டம் விண்ணப்பதாரரின் நிரந்தர வதிவிட மாவட்டமாக கருத்தில் கொள்ளப்படமாட்டாது என்பது வலியுறுத்தப்படுகின்றது.

5.2.1.3 மாகாணத் திறமைகளைக் கருதும் போது விண்ணப்பதாரர் முதல் தடவை க.பொ.த. (உ.த) பரீட்சைக்குத் தோற்றிய வருடம் மற்றும் அதற்கு முந்திய அண்மித்த இரண்டு வருடங்களில் அவர் நிரந்தரமாக வதிந்திருந்த மாகாணம் விண்ணப்பிக்கும் மாகாணமாக கருதப்படும்.

5.2.1.4 தேசிய மட்ட/ அகில இலங்கை திறமை வரிசையினை கருதும் போது நிரந்தர வதிவிடம் கருத்தில் கொள்ளப்படமாட்டாது.

5.2.2 அனைத்து விண்ணப்பதாரர்களும் தமது நிரந்த வதிவிடத்தை கீழே குறிப்பிடப்பட்டுள்ள செயன்முறையின் கீழ் உறுதிப்படுத்த வேண்டும்.

**கருத்தில் கொள்ளவும் :-**

- வாக்காளர் இடாப்பின் தரவுகள் நேர்முகப் பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் தேர்தல்கள் ஆணைக்குழுவின் அனுமதியுடன் இணையத்தினூடாக பரிசோதிக்கப்படும் என்பதால், எந்தவொரு விண்ணப்பதாரரும் விண்ணப்பிக்கும் சந்தர்ப்பத்தில் அதற்குரியதான எந்தவொரு ஆவணங்களையும் முன்வைத்தலாகாது என்பதுடன், நேர்முகப் பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் கீழே தரப்பட்டுள்ளவாறு உரிய உறுதிப்படுத்தல்களை மேற்கொள்ள வேண்டும்.

I. ஆட்சேர்ப்பதற்கான அடிப்படைக்குரியதாக, விண்ணப்பதாரர்கள் தமது நிரந்தர வதிவிடத்தை வாக்காளர் இடாப்பின் தரவுகளூடாக உறுதிப்படுத்த வேண்டும்.

II. விண்ணப்பதாரரின் வயது பூர்த்தியடையாத காரணத்தினால் வாக்காளர் இடாப்பில் பதிவு செய்ய முடியாத வருடங்களுக்கு, அவர்களது பெற்றோரின் பெயர்கள் உள்ளடங்கிய வாக்காளர் இடாப்பின் தரவுகளைக் கொண்டு நிரந்தர வதிவிடம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

III. ஏதேனும் ஒரு காரணத்தினால் வேறு பாதுகாவல் ஒருவருடன் உரிய காலப் பகுதியில் நிரந்தரமாக வதிந்திருந்த விண்ணப்பதாரர்கள் அவர்கள் பாதுகாவலரிடம் இருந்த காலப் பகுதியுடன் கிராம அலுவலரால் வழங்கப்படும் வதிவிடம் மற்றும் நற்பண்பு தொடர்பாக வழங்கப்படும் நற்சான்றிதழில் (DS – 04) - “ஏனையவை” எனும் நிரலில் குறிப்பிட்டு நேர்முகப் பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் அதனை உறுதிப்படுத்த வேண்டும். இதன் போது விண்ணப்பதாரரின் பெயர் வாக்காளர் இடாப்பில் இல்லாத வருடங்களுக்கு பாதுகாவலரின் வாக்காளர் இடாப்பின் தரவுகள் மூலம் வதிவிடம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

IV. ஏதேனும் ஒரு காரணத்தினால் உரிய மூன்று (03) வருடங்களுக்கு அல்லது அவற்றில் சிலவற்றிற்குரியதாக வாக்காளராக பதிவு செய்யாமை காரணமாக வாக்காளர் இடாப்பின் தரவுகள் மூலம் வதிவிடத்தை உறுதி செய்ய முடியாத சந்தர்ப்பங்களில் வாக்காளர் இடாப்பில் பதிவு செய்ய முடியாமைக்குரிய ஏற்றுக் கொள்ளப்படக்கூடிய காரணங்களை கிராம அலுவலரால் வழங்கப்படும் வதிவிடம் மற்றும் நற்பண்பு தொடர்பாக வழங்கப்படும் நற்சான்றிதழில் (DS-04) “ஏனையவை” எனும் நிரலில் குறித்த காலப் பகுதியினுள் நிரந்தரமாக வதிந்த பிரதேசத்தின் கிராம அலுவலரின் கையொப்பத்துடன் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

V. வாக்காளர் இடாப்பில் பதிவு செய்யாமை காரணமாக ஒரு வருடம் அல்லது இரண்டு வருடத்திற்கு மாத்திரம் வாக்காளர் இடாப்பில் தரவுகள் காணப்படும் சந்தர்ப்பங்களில் மீதி வருடத்திற்காக ஏற்றுக் கொள்ளப்படக்கூடிய வேறு ஆவணங்கள் மூலம் வதிவிடத்தை உறுதி செய்தல் வேண்டும். (உ+ம்: கிராம அலுவலரின் சான்றிதழ், ஆட்பதிவுத் திணைக்களத்தின் அடையாள அட்டையில் முகவரி)

VI. ஒரு வேளை மூன்று (03) வருடங்களுக்கும் அல்லாமல் ஒரு வருடத்திற்கு மாத்திரமேனும் விண்ணப்பதாரர் பதிவு செய்திருப்பின், மீதியான வருடங்களுக்கு பெற்றோரின்/ பாதுகாவலரின் வாக்கு எந்த மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்டிருந்தாலும் விண்ணப்பதாரரின் வாக்காளர் பதிவுக்கு முன்னுரிமையளிக்கப்படும்.

**6.0 தெரிவு செய்வதற்குரிய ஏனைய விடயங்கள்**

6.1. தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் உரிய பாடநெறிகளுக்கான தகுதிகளை உறுதிப்படுத்துவதற்காக ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆதாரங்கள் மற்றும் சான்றிதழ்களின் மூலப் பிரதிகளை நேர்முகப் பரீட்சையின் போது முன்னிலைப்படுத்துவதற்கு தயாராக இருத்தல் வேண்டும். உரிய தினத்தில் எந்தவிதமான அறிவித்தல்களும் இன்றி நேர்முகப் பரீட்சையில் கலந்துகொள்ளாத அவ் அம் மாவட்ட விண்ணப்பதாரர்களுக்குப் பதிலாக உரிய மாவட்டத்தின் தகுதிபெற்றவர் வரிசைப்படி பிரிதொரு விண்ணப்பதாரர் அழைக்கப்படுவர் என்பதுடன், வருகை தராத விண்ணப்பதாரர் தொடர்பில் மீண்டும் கருத்தில் கொள்ளப்படமாட்டாது.

6.2 அனைத்து சான்றிதழ்களதும் மூலப் பிரதிகளை நேர்முகப் பரீட்சையின் போது முன்னிலைப்படுத்துவது கட்டாயம் என்பதுடன், அன்றைய தினத்தில் மூலப் பிரதிகளை முன்னிலைப்படுத்த தவறும் விண்ணப்பதாரர்கள் தெரிவு செய்யப்படுவதற்காக கருத்தில் கொள்ளப்படமாட்டார்கள்.

6.3 பாடநெறியினூடாக எதிர்பார்க்கப்படும் மட்டத்தை அடைவதற்கும் ஆசிரியர் சேவையினுள் பிரவேசிப்பதற்கும் விண்ணப்பதாரர்களிடையே காணப்படவேண்டிய உடலியல் மற்றும் உளவியல் ரீதியிலான தகுதி, கல்வி அமைச்சினால் வழங்கப்படும் நியதிகளை பின்பற்றி முதலாவது நேர்முகப் பரீட்சையின் போது உரிய நேர்முகப் பரீட்சை சபையினரால் பரிசோதிக்கப்படும். இதன் போது பாடநெறியினைத் தொடர்வதற்கும் ஆசிரியர் தொழிலில் பிரவேசிப்பதற்கும் விண்ணப்பதாரரிடம் காணப்படும் உடலியல் மற்றும் உளவியல் தகைமைகள் போதுமானவையா என்பது தொடர்பில் அவர்கள் அவர்களது பரிந்துரையை முன்வைப்பர்.

6.4 மேலே 6.3ம் பந்தியின் பிரகாரம் தகுதிகளுடன் கூடிய மற்றும் ஆட்சேர்ப்பதற்கான நியதிகளின் கீழ் தகைமைகளைக் கொண்டுள்ள விண்ணப்பதாரர்களுக்கு பதிவுத் தபால் மூலம் அது தொடர்பில் அறியப்படுத்தப்படுவர். குறித்த விண்ணப்பதாரர்களைப் பதிவு செய்ய முன்னர் விண்ணப்பிக்கும் போது முன்னிலைப்படுத்திய தரவுகளின் துல்லியத் தன்மை மீண்டும் பரிசோதிக்கப்படும் என்பதுடன், அதன் படி தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்கள் மாத்திரம் உரிய தேசிய கல்வியியல் கல்லூரிகளில் உரிய பாடநெறிகளுக்கு பதிவு செய்யப்படுவர். தேசிய கல்வியல் கல்லூரியில் பதிவுசெய்ய வேண்டிய திகதி முதல் பத்து (10) கடமை தினங்களுக்குள் பதிவு செய்யாத பட்சத்தில் பிரவேசிப்பதற்கான வாய்ப்பினை அவர் இழக்க நேரிடும். அதன் படி ஏற்படக்கூடிய வெற்றிடங்களுக்காக ஆட்சேர்ப்பு அடிப்படையின் கீழ் உரிய தரவு அடிப்படையில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பதாரர்கள் உரிய திறமை வரிசைப்படி நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு தெரிவு செய்யப்படுவர்.

6.4.1 ஆகையால் உரிய காலப் பகுதியினுள் பதிவு செய்யாத விண்ணப்பதாரர்களால் விடுக்கப்படும் கோரிக்கைகள் தொடர்பில் ஒருபோதும் கருத்தில் கொள்வதற்கான வாய்ப்புக்கள் இல்லை என்பதைக் கருதவும்.

- மேலே இலக்கம் 6.4 அல்லது 6.4 இன் கீழ் நேர்முகப் பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் பரிந்துரை வழங்க முடியாத வகையிலான ஏதேனுமொரு விசேடமான பிரச்சனைக்குரிய நிலைமைகள் அவதானிக்கப்படும் பட்சத்தில் மாத்திரம் கல்வி அமைச்சின் விசேட குழுவொன்றிற்கு அவை முன்னிலைப்படுத்தப்படும். குறித்த அறிக்கை கல்வியியல் கல்லூரிகள் சபை/ கல்விச் செயலாளருக்கு முன்னிலைப்படுத்தப்பட்டு தீர்மானங்கள் நடைமுறைப்படுத்தப்படும்.

6.5. முதலாம் மற்றும் இரண்டாம் நேர்முகப் பரீட்சைகளுக்கு தோற்றியதன் பின்னர் கல்வியியல் கல்லூரியின் பதிவு செய்வதற்காக தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் கல்வியியல் கல்லூரிக்க அனுமதிக்கப்பட முன்னர் தமது சுகாதார நிலைமைகளை உறுதிப்படுத்துவதற்கான மருத்துவப் பரிசோதனை ஒன்றிற்கு தோற்ற வேண்டும்.

6.6. எந்தவொரு விண்ணப்பதாரரும் தமது தகைமைகளுக்கமைய, ஒரு பாடநெறிக்கு அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட பாடநெறிகள்க்கு விண்ணப்பிக்க முடியும். இருப்பினும் திறமை வரிசைப்படி தகுதி பெற்றும் பாடநெறிக்கு மாத்திரமே நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர் என்பதுடன், ஒன்றிற்கு மேற்பட்ட பாடநெறிகளுக்கு தெரிவு செய்யப்படுவதற்கு தகைமைகளைக் கொண்டிருக்கும் பட்சத்தில் விண்ணப்பதாரரின் பாடநெறி விருப்புத் தெரிவு வரிசைக்கு முன்னுரிமை வழங்கி ஒரு பாடநெறிக்கு தெரிவு செய்யப்படுவார்.

6.7 தேசிய தொழில்நுட்பக் கல்வியியல் கல்லூரியின் ஏதேனும் ஒரு பாடநெறிக்கு பதிவு செய்த பின்னர் சில வேளைகளில் பிரிதொரு தேசிய கல்வியியல் கல்லூரியின் பாடநெறி ஒன்றிற்கு பிற்காலத்தில் தெரிவு செய்யப்படும் பட்சத்தில் அதற்கு ஒரு போதும் அனுமதி வழங்கப்படமாட்டாது.

6.8 போதியளவு ஆசிரியர் தேவைகள் இல்லாத பாடநெறிகளை இரத்துச் செய்தல், ஆட்சேர்ப்பு செய்யப்படும் பயிலுனர்களின் எண்ணிக்கையைத் தீர்மானித்தல் மற்றும் ஒவ்வொரு பாடநெறிகளையும் நிறுவனத்தினுல் நிலைப்படுத்துதல் தொடர்பில் இறுதித் தீர்மானம் கல்வியியல் கல்லூரிகள் சபை/ கல்விச் செயலாளரால் எடுக்கப்படும்.

## 7.0 பாடநெறிக்கு விண்ணப்பிப்பதற்கு அல்லது அனுமதிக்கப்படுவதற்கு தகுதியற்றவர்கள்

7.1 ஏற்கனவே அரச அல்லது அரச உதவி பெறும் பாடசாலைகளில் அல்லது அரசில் பதிவு செய்யப்பட்ட பிரிவெனாக்களில் அல்லது அனுமதிக்கப்பட்ட வேறு கல்வி நிறுவனங்களில் ஆசிரியர் நியமனம் பெற்றுள்ளவர்கள்,

7.2. அரச பாடசாலை ஒன்றில் ஆசிரியர் நியமனம் ஒன்றிற்காக தெரிவு செய்யப்பட்டுள்ளவர்கள்.

7.3. ஏற்கனவே தேசிய கல்வியியல் கல்லூரி ஒன்றில் பாடநெறி ஒன்றை தொடர்கின்ற அல்லது தொடர்ந்த பின்னர் இடைவிலகிச் சென்ற அல்லது தொடர்ந்து நிறைவு செய்தவர்கள்

7.4. அரச பல்கலைக்கழகமொன்றில்/ அரச பல்கலைக்கழக கல்லூரி ஒன்றில் க.பொ.த. (உ.த.) தகைமைகளின் அடிப்படையில் ஆட்சேர்க்கப்படும் பட்டங்கள்/ டிப்ளோமா பாடநெறிகளை தொடர்வதற்காக அரசின் இலவசக் கல்வி வரப்பிரசாதங்களின் கீழ் உள்ளக மாணவர் ஒருவராக பதிவு செய்துள்ள/ கற்றுக் கொண்டிருக்கும்/ பட்டப் பாடநெறி ஒன்றை கற்று நிறைவு செய்துள்ளவர்கள்,

**கருத்தில் கொள்ளவும் :**

பல்கலைக்கழகத்தில் முதன்மைப் பட்டப் பாடநெறி ஒன்றைத் தொடர்வதற்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் நிகழ்நிலை முறைமை ஊடாக பதிவு செய்திருப்பதும் தேசிய கல்வியியல் கல்லூரிக்கு விண்ணப்பிப்பதற்கு தகுதியற்றவராவதற்கு காரணமாகின்றது.

7.5 ஒழுக்காற்று அடிப்படையில் அல்லது வேறு காரணங்களால் தேசிய கல்வியியல் கல்லூரி ஒன்றில் மாணவராக இருந்து நீக்கப்பட்டு இரத்துச் செய்யப்பட்டவர்கள்.

7.6 திருமணம் பதிவு செய்யப்பட்டுள்ளவர்கள் அல்லது விவாகரத்தான விண்ணப்பதாரர்கள்

## 8.0 பாடநெறிக்குரிய நிபந்தனைகள்

8.1 பாடநெறிக் காலம் நான்கு வருடங்களாகும். அது தேசிய கல்வியியல் கல்லூரியின் மூன்று வருட வதிவிட நிறுவனப் பயிற்சியையும், பாடசாலை மற்றும் தொழில்நுட்ப நிறுவனம் ஒன்றிற்கு இணைப்புச் செய்யப்பட்டு 12 மாதங்களுக்கு கட்டுருப் பயிற்சி ஒன்றையும் உள்ளடக்கியிருக்கும். மூன்றாம் வருட நிறைவில் நடாத்தப்படும் இறுதி வெளிவாரிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்காக பயிலுனர்களின் வரவு 90% சதவீதத்திற்கு குறையாமல் இருப்பது கட்டாயமாகும்.

8.2 சகல பயிலுனர்களும் முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் வருடங்களில் நடாத்தப்படும் உள்ளக தொடர் மதிப்பீடு மற்றும் உள்ளகப் பரீட்சைகள் மற்றும் இறுதி வெளிவாரிப் பரீட்சை ஆகியவற்றில் சித்தியடைதல் வேண்டும்.

8.3 பயிலுனர் ஒருவருக்கு தங்கியிருந்து கல்விசார் செயற்பாடுகளில் ஈடுபடும் மூன்று வருடங்களுக்கும் ஒரு வருடத்தில் பத்து (10) மாதங்களுக்கு மாதாந்தம் ரூ. 8000.00 பெறுமதியான உணவு மற்றும் வதிவிட வசதிகள் வழங்கப்படும். கட்டுருப் பயிற்சிக்குரிய வருடத்தினுள் பத்து (10) மாதங்களுக்கு மாதாந்தம் ரூ.8000/- வீதம் மாதாந்த கொடுப்பனவு வழங்கப்படும். தனிப்பட்ட தேவைகளுக்குரிய ஏனைய செலவினங்கள் பயிலுனரால் ஏற்றுக் கொள்ளப்படல் வேண்டும்.

8.4 தேசிய கல்வியியல் கல்லூரி ஒன்றில் பதிவு செய்யும் விண்ணப்பதாரர்கள் பாடநெறிக்காக செலவு செய்யப்படும் நிதி மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதற்காக கல்வி அமைச்சுடன் ரூபா பத்து இலட்சம் (ரூ. 1,000,000.00) பெறுமதியான பிணை மற்றும் உடன்படிக்கையில் கைச்சாத்திட வேண்டும். விண்ணப்பதாரர் தேசிய கல்வியியல் கல்லூரியில் பதிவு செய்த தினம் முதல் அறுபது (60) நாட்காட்டி நாட்களுக்குள் பாடநெறியிலிருந்து இடைவிலகுவதாயின் பயிலுனருக்காக அரசினால் செய்யப்படும் செலவினை மீளச் செலுத்தாமல் விலக முடியும். விண்ணப்பதாரர் தேசிய கல்வியியல் கல்லூரியில் பதிவு செய்த திகதி முதல் அறுபது (60) நாட்காட்டி நாட்களுக்குப் பின்னர் விலகும் போது இந்த பிணை மற்றும் உடன்படிக்கையின் மொத்த தொகையினை (ரூ. 1,000,000.00) அரசுக்கு செலுத்த வேண்டும். அத்துடன் எவரேனும் ஒரு விண்ணப்பதாரர் எந்தவித முறையான அறிவித்தலுமின்று ஒரு மாதத்திற்கு குறையாத காலத்திற்கு பாடநெறியில் கற்கைச் செயற்பாடுகளில் பங்கேற்கவில்லை எனின் அவர் பாடநெறியை விட்டு இடைவிலகியவராக கருதப்பட்டு பிணைமுறி மற்றும் உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள மொத்த தொகையான ரூபா 1,000,000.00 நிதியினை அறவிட்ட பின்னர் பாடநெறியிலிருந்து நீக்கப்படுவார்.

பாடநெறியினை வெற்றிகரமாக நிறைவு செய்த பின்னர் அரசாங்க பாடசாலை ஒன்றிற்கு வழங்கப்படும் ஆசிரியர் நியமனத்தை ஏற்றுக் கொள்ளவில்லை எனின், பிணைமுறி மற்றும் உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள மொத்த தொகையை (ரூ.1,000,000.00) அரசிற்கு செலுத்த வேண்டும். அத்துடன் பாடநெறியை வெற்றிகரமாக நிறைவு செய்த பின்னர் அரசாங்க பாடசாலை ஒன்றிற்கு வழங்கப்படும் ஆசிரியர் நியமனத்தைப் ஏற்றுக் கொண்ட பின்னர் ஐந்து (05) வருடங்கள் அரசிற்கு சேவையாற்றாத ஒருவர், சேவையாற்றுவதற்கான ஐந்து வருடங்களில் மீதியாக உள்ள காலத்திற்குரிய (மாத அடிப்படையில் கணிப்பிட்டு) தொகையினை செலுத்த வேண்டும்.
அந்த நிதி பின்வருமாறு கணிப்பிடப்படுகின்றது.

$$ரூ1,000,000 \times \frac{\text{பூரணப்படுத்துவதற்கு மீதமாக உள்ள மாதங்களின் எண்ணிக்கை}}{\text{60 மாதங்கள்.}}$$

8.4.1 விசேட மருத்தக் காரணங்களுக்காக பாடநெறிக் காலப் பகுதியினுள் பாடநெறியை விட்டு இடைவிலகிச் செல்வதாயின் கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களின் உதவியுடன் நோயின் உண்மை நிலைமையினை உறுதிப்படுத்த வேண்டும்.

- நோய் நிலைமைக்காக சிகிச்சைப் பெற்றுக்கொள்வதற்குரிய ஏற்றுக் கொள்ளக்கூடிய மருத்துவ அறிக்கைகள்
- தொடர்ந்தும் கற்றல் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்குப் பொருத்தமான சுகாதார நிலைமையில் இல்லை என்பதாக அரச வைத்தியர் ஒருவரூடாக உறுதிப்படுத்தப்பட்ட கடிதம்.

உரிய ஆவணங்கள் தொடர்பில் கருத்தில் கொண்டு, கல்வியியல் கல்லூரியின் முகாமைத்துவக் குழுவின் அவதானிப்புக்கள் மற்றும் பரிந்துரைகளை முன்வைத்த பின்னர், கல்வி அமைச்சின் உத்தியோகத்தர்களை உள்ளடக்கிய குழு ஒன்றிற்கும் சுகாதார அமைச்சிற்கும் முன்னிலைப்படுத்தப்படும் என்பதுடன், அதன் போது அரச வைத்தியசாலை வைத்தியர் ஒருவரின் அல்லது மருத்துவ சபையொன்றின் பரிந்துயைப் பெற்றுக் கொண்டு, அதற்காக கல்வியியல் கல்லூரிகள் சபை/ கல்விச் செயலாளரின் அனுமதியைப் பெற்று, எந்தவொரு அறவீடுகளுமின்றி பாடநெறியிலிருந்து விலகுவதற்கு அனுமதி வழங்கப்படும்.

8.4.2 சட்டபூர்வமாக பாடநெறியிலிருந்து விலகாமல், பாடநெறிக் காலப் பகுதியினுள் அல்லது நிரந்தர ஆசிரியர் நியமனம் வழங்கப்படும் காலத்திற்கிடையே அல்லது வெளிநாட்டுக்கு செல்வதற்கு எந்தவொரு பயிலுனர்களுக்கும் அனுமதி வழங்கப்படமாட்டாது.

8.5 பாடநெறியிலிருந்து இடைநடுவே ஒழுக்காற்று ரீதியான காரணங்களுக்காக அல்லது ஆட்சேர்ப்பு செயற்பாடுகளுக்காக போலியான தகவல்களை முன்னிலைப்படுத்தியமைக்காக 7.0 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பிப்பதற்கு அல்லது அனுமதிக்கப்படுவதற்கு தகுதியற்றவர்கள் எனும் பந்திக்குரியதாக உண்மைத் தகவல்களை மறைத்த காரணத்தினால் பாடநெறியிலிருந்து நீக்க வேண்டிய சந்தர்ப்பம் ஏற்படும் பட்சத்தில் உடன்படிக்கை மற்றும் பிணை முறிக்குரிய முழுமையான தொகையினை (ரூ. 1,000,000.00) அறவிடுவதற்கு நடவடிக்கையெடுக்கப்படும்.

8.6 பாடநெறி நடைபெறும் காலப் பகுதியினுள் பயிலுனருக்கு 7.4 பந்தியில் தரப்பட்டுள்ளவாறான பாடநெறி ஒன்றைத் தொடர்வதற்கு ஒருபோதும் அனுமதியளிக்கப்படமாட்டாது. அவ்வாறாக பாடநெறி ஒன்றைத் தொடர்வதாக உறுதிப்படுத்தப்படும் பட்சத்தில் பயிலுனரால் கைச்சாத்திடப்பட்ட பிணை முறி மற்றும் உடன்படிக்கையின் மொத்த பெறுமதியினை (ரூ, 1,000,000.00) அறவிட்டதன் பின்னர் பாடநெறியிலிருந்து நீக்கப்படுவர்.

8.7 வர்த்தமானி அறிவித்தலின் 7.4ம் பந்தியில் தரப்பட்டுள்ள தகைமைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு வேறு ஏதேனும் ஒரு அரச உயர் கல்வி நிறுவனமொன்றில் தொழிற் பயிற்சிப் பாடநெறி ஒன்றை/ டிப்ளோமா அல்லது உயர் டிப்ளோமா பாடநெறி ஒன்றை தொடர்வதற்காக பதிவு செய்துள்ள/ பாடநெறியை தொடரும் விண்ணப்பதாரர்கள் கல்வியியல் கல்லூரிக்கு அனுமதிக்கப்படுவதற்காக தெரிவு செய்யப்பட்டால், அதில் பதிவு செய்யும் தினத்தில் மேற்கூறப்பட்ட நிறுவனம் ஒன்றில் தாம் பதிவு

செய்துள்ள/ தொடரும் பாடநெறியிலிருந்து வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட முன்னரான ஒரு தினத்தில் முறையாக விலகியமையை உறுதிப்படுத்துவதற்கான ஆவணங்கள் கல்வியல் கல்லூரிக்கு சமர்ப்பிக்கப்படுவது கட்டாயம் ஆகும். அவ்வாறு செய்யத் தவறும் விண்ணப்பதாரர்கள் கல்வியியல் கல்லூரியில் பதிவு செய்யப்படமாட்டார்கள்.

8.8 பாடநெறிக் காலப் பகுதியினுள் பயிலுனர் திருமணப் பதிவு செய்தால் அல்லது விண்ணப்பிக்கும் போது/ கல்வியியல் கல்லூரியில் பதிவு செய்ய முன்னர் திருமணப் பதிவு செய்திருப்பின்/ விவாகரத்துப் பெற்றிருப்பின், அது தொடர்பில் உறுதிப்படுத்தப்படும் பட்சத்தில் அவர்கள் கல்லூரியிலிருந்து விலக்கப்படுவர். திருமணமாகியமை வெளிப்படுத்தப்பட்ட பின்னர் பல்வேறு காரணங்களை முன்வைத்து பாடநெறிக் காலத்தினுள் விவாகரத்துப் பெறுபவர்கள் மீண்டும் பயிலுனர் மாணவர்களாக இணைத்துக் கொள்ளப்படமாட்டார்கள்.

8.9 பாடநெறிக் காலப் பகுதியினுள் எதிர்பார்க்கப்பட்ட நடத்தை, வரவு, உற்சாகம் மற்றும் கல்விசார் செயற்பாடுகளில் முன்னேற்றத்தை வெளிக்காட்டாத (இணைப் பாடவிதான செயற்பாடுகள் உட்படலாக) பயிலுனர்கள் பயிற்சியிலிருந்து நீக்கப்படும். அவ்வாறே நிறுவனத்தில் பயிற்சியில் உள்ள முதலாவது வருடத்தில் நடாத்தப்படும் மதிப்பீட்டில் திருப்திகரமான நிலையை அடையத் தவறும் பட்சத்தில் பாடநெறியிலிருந்து நீக்கப்படுவார். இவ் விடயம் தொடர்பில் இறுதித் தீர்மானம் கல்வியியல் கல்லூரிகள் சபை/ கல்விச் செயலாளரால் எடுக்கப்படும்.

8.10 பாடநெறிக் காலப் பகுதியினுள் பயிலுனர் உடலியல் மற்றும் உளவியல் தகுதி தொடர்பில் பீடாதிபதியிடமிருந்து அல்லது கட்டுப் பயிற்சிக் காலத்தில் அதிபரிடமிருந்து முறைப்பாடுகள் கிடைக்கப்பெறும் பட்சத்தில் மீண்டும் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்படமாட்டார். அதன் அறிக்கையினை கல்வியியல் கல்லூரிகள் சபையில்/ கல்விச் செயலாளரிடம் முன்னிலைப்படுத்தி இறுதித் தீர்மானம் வழங்கப்படும்.

8.11 பாடநெறிக் காலப் பகுதியினுள், கல்வியியல் கல்லூரியின் ஒழுக்கச் சட்டக் கோவைக்கு முரணாக ஏதேனும் ஒரு செயற்பாட்டில் ஈடுபட்டமை உறுதிப்படுத்தப்படும் பட்சத்தில் அது தொடர்பில் கல்வியியல் கல்லூரி ஒழுக்காற்று சபையின் பரிந்துரைக்கு அமைவாக குறிப்பிட்ட காலப் பகுதிக்கு வகுப்புத் தடை/ பாடநெறிக் காலத்தை நீடித்தல்/ பாடநெறியிலிருந்து நீக்குதல்/ வேறு பொருத்தமான தண்டனை ஒன்றை வழங்குதல் போன்றவற்றிற்கான அதிகாரம் கல்வியியல் கல்லூரிகள் சபை/ கல்விச் செயலாளருக்கு உள்ளது.

8.12 பாடநெறியினைத் தொடரும் காலப் பகுதியினுள் உரிய பயிலுனர்களுக்கு அல்லது ஏதேனும் வேறு பாடநெறிகளைத் தொடர்வதற்காக வார நாட்களில்/ வார இறுதி நாட்களில் நிறுவனத்திலிருந்து வெளிச் செல்வதற்கு ஒரு போதும் அனுமதியளிக்கப்படமாட்டாது.

8.13 கல்விமாணி பட்டதாரி ஆசிரியர்கள் முதல் ஐந்து வருடங்களுக்குள் ஆசிரியர் சேவையில் ஈடுபடும் போது ஏதேனும் ஒரு காரணத்தினால் சேவையிலிருந்து இடைவிலகுவதாயின் அல்லது சேவையிலிருந்து இடைவிலகி வெளிநாடு செல்வதாயின் உரிய பிணைமுறி மற்றும் உடன்படிக்கைக்கு அமைய மொத்தப் பெறுமதியில் (ரூ. 1,000,000.00) மீதியாக உள்ள காலப் பகுதியில் அறவிடப்படவேண்டிய நிதியினை (மாதங்களாக கணிப்பிட்டு) அரசிற்கு செலுத்த வேண்டும்.

குறித்த தொகை பின்வருமாறு கணிக்கப்படுகின்றது,

$$\frac{\text{ரூ } 1{,}000{,}000}{60 \text{ மாதங்கள்}} \times \text{பூரணப்படுத்துவதற்கு மீதமாக உள்ள மாதங்கள்.}$$

**கருத்தில் கொள்ள வேண்டும்** :

- முதல் ஐந்து வருடங்களுக்குள் 8.13 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு சேவையிலிருந்து விலகும் பட்சத்தில் மீண்டும் தேசிய கல்வியியல் கல்லூரிக் கல்விமாணி பட்டதாரி ஒருவராக ஆசிரியர் சேவைக்குள் பிரவேசிப்பதற்கு வாய்ப்பளிக்கப்படமாட்டாது.

- அரச பாடசாலை ஒன்றில் முதல் நியமனம் பெற்ற திகதி முதல் ஐந்து (05) வருடங்கள் முனைப்புடனான சேவைக் காலத்தை பூர்த்தி செய்யாத பட்சத்தில் குறித்த கல்வியியல் கல்லூரிக் கல்விமாணிப் பட்டதாரி ஆசிரியர் உரிய விவரிக்கப்பட்ட பட்டச் சான்றிதழைப் பெற்றுக் கொள்வதற்காக விண்ணப்பிப்பதற்கு உரித்தற்றவராகின்றார்.

- ஆசிரியர் சேவையில் முதல் ஐந்து வருடங்களையும் பூர்த்தி செய்யாத, தகுதான் காலத்திற்குட்பட்ட தேசிய கல்வியியல் கல்லூரிக் கல்விமாணிப் பட்டதாரி ஆசிரியர்கள் கல்விச் செயலாளரின் 24/2017 சுற்றுநிருபத்தின் பிரகாரமும் வர்த்தமானி அறிவித்தல், உடன்படிக்கை, பிணைமுறி, தாபன விதிக்கோவையில் சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிமுறைகள் மற்றும் உரிய காலப்பகுதியில் செல்லுபடியாகும் சட்டங்களுக்கு அமைவாக கல்விசார் செயற்பாடுகளுக்காக மாத்திர சம்பளமற்ற விடுமுறை பெற்று வெளிநாடு செல்ல முடியும்.

- ஆசிரியர் சேவையில் முதல் ஐந்து வருடங்களைப் பூர்த்தி செய்யாத, இருப்பினும் சேவையில் உறுதிப்படுத்தப்பட்ட தேசிய கல்வியியல் கல்லூரியின் கல்விமாணி ஆசிரியர்களுக்கு கல்விச் செயலாளரின் 24/2017 சுற்றுநிருபத்தின் பிரகாரமும் வர்த்தமானி அறிவித்தல், உடன்படிக்கை, பிணை முறி, தாபன விதிக்கோவையின் XII ஆம் அத்தியாயத்தின் 16 ஆம் பந்திக்கமைய உரிய காலப் பகுதியில் செல்லுபடியாகும் சட்டங்களுக்கமைய கல்விசார் செயற்பாடுகள்/ தொழில்களுக்காக சம்பளமற்ற விடுமுறை பெற்று வெளிநாடு செல்ல முடியும்.

8.14 பாடநெறியை வெற்றிகரமாக பூர்த்தி செய்யும் பயிலுனர்களுக்கு கல்விமாணி பட்டம் வழங்கப்படும். பாடநெறி சார்ந்த வேலைகள் மற்றும் ஆளுமை அபிவிருத்தி (கட்டாயமாக பங்கேற்க வேண்டிய இணைப்பாடவிதான செயற்பாடுகள் உட்படலாக) ஆகியன பாடநெறிக் காலப் பகுதியினுள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படும் என்பதுடன், இந்த மதிப்பீடுகள் கல்விமாணி பட்டத்தை வழங்குவதற்காக நடாத்தப்படும் இறுதி மதிப்பீட்டின் ஒரு பகுதியாகும்.

8.15 கல்விமாணி பட்டத்தைப் பெற்றுக் கொண்ட பயிலுனர்களுக்கு அரச பாடசாலைகளில் ஆசிரியர் நியமனம் வழங்கப்படும். அவர்கள் மாவட்ட/ மாகாண/ தேசிய அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டாலும், நிலைப்படுத்தும் போது உரிய மாவட்டத்தில்/ உரிய மாகாணத்தில் வெற்றிடங்கள் இல்லை எனின், நாட்டின் எந்தவொரு இடத்திலேனும் சேவையாற்றுவதற்கு இணங்க வேண்டும். நிலைப்படுத்துவது தொடர்பான இறுதித் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கல்விச் சேவைகள் குழுவின் அனுமதியுடன் கல்வியியல் கல்லூரிகளை சபை/ கல்விச் செயலாளரைச் சாரும்.

8.15.1 பாடநெறிகளுக்கு தெரிவு செய்யும் நேர்முகப் பரீட்சைகளுக்கு அழைக்கப்படும் விண்ணப்பதாரர்கள் மேற்படி நிபந்தனைகளுக்கு இணங்குவதாயின் மாத்திரம் குறித்த நேர்முகப் பரீட்சைக்கு தோற்ற வேண்டும்.

8.15.2 மேற்படி நிபந்தனைகளின் கீழ் பாடநெறியினை தொடரும் விண்ணப்பதாரர்கள் கட்டாயமாக தாம் கற்கும் பாடநெறிக்குரிய பாடத்தைக் கற்பிக்கும் பணிகளில் ஈடுபடவேண்டும். அத்துடன் கல்விமாணி பட்டத்தை பூரணப்படுத்தியதன் பின்னர், மாவட்ட/ மாகாண/தேசிய அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் முதல் நியமனம் பெறும், தாம் நிரந்தரமாக வதியும் மாவட்டத்தின்/ நிரந்தரமாக வதியும் மாகாணத்தின் அல்லது தேசிய அடிப்படையின் கீழ் தெரிவுசெய்யப்படும் மாவட்டத்தில் அல்லது முதல் நியமனம் பெறும் எந்தவொரு மாவட்டம்/ மாகாணத்திலும் முதல் நியமனத் திகதி முதல் ஆகக்குறைந்தது ஐந்து (05) வருடங்கள் கட்டாயமாக சேவையாற்றும் நிபந்தனையின் கீழ் கல்வி அமைச்சுடன் பிணை முறி மற்றும் உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திட வேண்டும்.

8.16 ஆட்சேர்ப்பு நடைமுறையினை நடைமுறைப்படுத்தும் போது அது தொடர்பில் உரிய உத்தியோகத்தர்களுக்கு பயிலுனர் அல்லது அவருடன் தொடர்புடைய எவரேனும் ஒருவர் முறையற்ற ரீதியில் செல்வாக்குச் செலுத்துவதானது ஆட்சேர்ப்பதற்கான தகுதியின்மையாக கருதப்படும்.

8.17 விண்ணப்பதாரர்கள் விண்ணப்பிக்கும் பாடநெறிகளுக்குரிய அனைத்து கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் விண்ணப்பிக்கும் இறுதித் திகதிக்கு (2025.01.10) அல்லது அதற்கு முன்னர் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

8.18 கல்வியியல் கல்லூரியில் ஏதேனும் ஒரு பாடநெறிக்கு உரிய மொழி மூலத்தில், உரிய மாவட்டத்திலிருந்து ஆட்சேர்ப்பு செய்யப்படவேண்டிய எண்ணிக்கையினைப் பூரணப்படுத்துவதற்காக மாவட்ட/ மாகாண/ தேசிய திறமை வரிசை அடிப்படையில் தகைமை பெற்றவர்கள் போதியளவு இல்லை எனின் குறித்த கல்வியியல் கல்லூரியில் நடைமுறைப்படுத்தப்படும் ஏனைய பாடநெறிகளுள் கல்வி முறைமையில் நிலவும் அதிக ஆசிரியர் தேவைகளுடன் கூடிய பாடநெறிகளுக்கு முன்னுரிமை கிடைக்கும் வகையில், அவ் அப் பாடநெறிகளின் கீழ் தேசிய மட்டத்தில் தகுதிபெற்ற விண்ணப்பதாரர்களைக் கொண்டு மீதி வெற்றிடங்கள் நிரப்பப்படும்.

9.0 **விண்ணப்பிப்பதற்கான ஆலோசனைகள்**

- வர்த்தமானி அறிவித்தலின் 12.0 அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஒவ்வொரு பாடநெறிகளுக்கும் தெரிவு செய்யப்படும் எண்ணிக்கைகள் தொடர்பில் தெளிவான புரிதலைப் பேற்று அதற்கமைய விண்ணப்பிக்க வேண்டும்.

9.1 அதி விசேடம் :

9.1.1 அனைத்து விண்ணப்பதாரர்களும் நிகழ்நிலை முறைமை (Online System) ஊடாக மாத்திரமே விண்ணப்பிக்க வேண்டும்.

**கருத்தில் கொள்ளவும்: பதிவு தபாலில் விண்ணப்பப்படிவங்களை அனுப்பி வைக்கவேண்டிய அவசியமில்லை.**

9.1.2 நிகழ்நிலை முறைமையூடாக (Online System) விண்ணப்பிக்கும் போது ஆங்கில மொழியில் மாத்திரமே விண்ணப்பிக்க வேண்டும். அதன் படி நிகழ்நிலை முறைமையினுள் பிரவேசிப்பதற்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள இணைப்பினைப் பயன்படுத்தி நிகழ்நிலை முறைமையினுள் பிரவேசித்து உரிய படிமுறைகளைப் பின்பற்றி தங்களது விண்ணப்பப் படிவத்தை சமர்ப்பிக்க வேண்டும்.

https://ncoe.moe.gov.lk/NcoeTechApp/

9.2 வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள ஆலோசனைகளை நன்கு வாசித்து மிகச் சரியாக தரவுகளை வழங்குவதற்கான முழுப் பொறுப்பும் விண்ணப்பதாரரைச் சாரும். விசேடமாக விண்ணப்பிக்கும் பாடநெறி தொடர்பில் தகவல்கள் அல்லது வேறு திருத்தங்களை மேற்கொள்வதற்காக பின்னராக விடுக்கப்படும் கோரிக்கைகள் கருத்தில் கொள்ளப்படமாட்டாது.

9.3 வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள், தகைமைகள் மற்றும் வெற்றிடங்களின் எண்ணிக்கை ஆகியன தொடர்பில் விசேட கவனம் செலுத்தி, அனைத்து விண்ணப்பதாரர்களும் உச்ச பட்சமாக மூன்று (02) பாடநெறிகளுக்கு விண்ணப்பிக்க முடியும்.

9.4 வர்த்தமானி அறிவித்தலின் 5.2 – "நிரந்தர வதிவிடத்தை தீர்மானித்தல்" என்பதன் கீழ் 5.2.1ம் பந்திக்குரிய மாவட்டங்களின் இலக்கங்கள் கீழ்வருமாறு,

- குறித்த மாவட்ட இலக்கம் தொடர்பில் விசேட கவனம் செலுத்தி விண்ணப்பதாரர்கள் நிரந்தரமாக வதியும் மாவட்டத்திற்குரிய இலக்கம் சரியாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும்

| *மாவட்டம்* | *மாவட்ட இலக்கம்* |
|---|---|
| கொழும்பு | 01 |
| கம்பஹா | 02 |
| களுத்துறை | 03 |
| கண்டி | 04 |
| மாத்தளை | 05 |
| நுவரெலியா | 06 |
| காலி | 07 |
| மாத்தறை | 08 |
| அம்பாந்தோட்டை | 09 |
| யாழ்ப்பாணம் | 10 |
| கிளிநொச்சி | 11 |
| மன்னார் | 12 |
| வவுனியா | 13 |
| முல்லைத்தீவு | 14 |
| மட்டக்களப்பு | 15 |
| அம்பாறை | 16 |
| திருகோணமலை | 17 |
| குருநாகல் | 18 |
| புத்தளம் | 19 |
| அநுராதபுரம் | 20 |
| பொலனறுவை | 21 |
| பதுளை | 22 |
| மொணராகலை | 23 |
| இரத்தினபுரி | 24 |
| கேகாலை | 25 |

9.5 விண்ணப்பிக்கும் சந்தர்ப்பத்தில் எவரேனும் ஒரு விண்ணப்பதாரருக்கு தமது தனிப்பட்ட மின்னஞ்சல் முகவரி (Personal E-mail Address) இல்லாத பட்சத்தில் நிகழ்நிலை முறைமையூடாக (Online System) விண்ணப்பிக்க முன்னர் தனிப்பட்ட மின்னஞ்சல் முகவரி ஒன்றை அமைத்துக் கொள்வது கட்டாயமாகும். இந்த மின்னஞ்சல் முகவரி விண்ணப்பதாரருக்கு தனிப்பட்ட ரீதியில் உரித்துடையதாக அமைக்கப்படல் வேண்டும்.

9.6 அவ்வாறே ஏதேனும் ஒரு பாடநெறிக்கு வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு தகைமைகள் இல்லாமல் விண்ணப்பித்த பின்னர், அதன் விளைவாக விண்ணப்பதாரர்களுக்கு ஏற்படக்கூடிய அசௌகரியங்கள் தொடர்பில் கல்வி அமைச்சு எந்தவிதத்திலும் பொறுப்பேற்காது.

9.7 அனைத்து விண்ணப்பதாரர்களும் நிகழ்நிலை முறைமையூடாக (Online System) விண்ணப்பித்த பின்னர் குறித்த விண்ணப்பப் படிவத்தின் அச்சுப் பிரதியொன்றை விண்ணப்பதாரர்கள் பெற்றுக் கொள்ள முடியும் என்பதுடன் அவ்வாறாக பெற்றுக் கொள்ளும் அச்சுப் பிரதியினை (Hard Copy - PDF) தம் வசம் வைத்திருத்தல் வேண்டும். ஏதேனும் விசாரணை அல்லது மேன்முறையீடுகளை முன்வைக்கும் சகல சந்தர்ப்பங்களிலும் குறித்த ஆவணத்தின் பிரதியொன்று முன்னிலைப்படுத்தப்படல் வேண்டும்

இவ் விடயம் தொடர்பில் கவனம் செலுத்தாமல் செயற்படுவதன் விளைவாக விண்ணப்பதாரர் எதிர்கொள்ளும் அசௌகரியங்கள் தொடர்பில் கல்வி அமைந்து பொறுப்பேற்காது.

9.8 அதே போன்று விண்ணப்பதாரர் விண்ணப்பித்த மாத்திரத்தில் அனுமதி பெற்றுக் கொள்வதற்கு தகுதி பெறமாட்டார். அத்துடன் அவ் அம் மாவட்டங்கள் அல்லது தேசிய அடிப்படையில் நிலவும் வெற்றிடங்கள் மற்றும் வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளின் பிரகாரம் மாத்திரமே ஆட்சேர்ப்பு செய்யப்படும். இவ் விடயம் தொடர்பில் இறுதித் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் கல்வியியல் கல்லூரிகள் சபை/ கல்விச் செயலாளரையே சாரும்.

9.9 விண்ணப்பதாரரால் முன்னிலைப்படுத்தப்படும் சான்றிதழ்கள் போலியானவை அல்லது மோசடியானவை என்பதாக பின்னர் தெரியவரும் பட்சத்தில் விண்ணப்பதாரர் பாடநெறியிலிருந்து/ சேவையிலிருந்து நீக்கப்படுவார் என்பதுடன், அதன் பின்னர் அரசாங்க சேவையில் எந்தவொரு நியமனத்தையும் பெற்றுக் கொள்வதற்கு தகுதியற்றவராவார்.

10.0 வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் மற்றும் நிபந்தனைகள் தொடர்பில் ஏற்படக்கூடிய பிரச்சனைகள் அல்லது விசேட சந்தர்ப்பங்கள் தொடர்பில் கல்வியியல் கல்லூரிகள் சபை/ கல்விச் செயலாளரின் தீர்மானமே இறுதித் தீர்மானம் ஆகும்.

11.0 இந்த வர்த்தமானி அறிவித்தலின் சிங்கள மொழிக் கருத்துக்களுக்கும் தமிழ் அல்லது ஆங்கில மொழி மூலமான கருத்துக்களுக்குமிடையே ஏதேனும் பொருத்தப்பாடின்மைகள் இருப்பின் அதன் போது சிங்கள மொழி மூலமான வசனம் வலுவில் இருக்கும்.

நாலக களுவெவ,
செயலாளர்.

கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு,
இசுருபாய,
பத்தரமுல்ல,
2024 மார்கழி மாதம் 16 ஆந் திகதி.

இணைப்பு 2

Recruitement of Student Teachers to the National Colleges of Education on Technology on the results of G.C.E. (A.L.) Examination - 2023 National and District basis 2025

| பாடத்தின் பெயர் | தேசிய அடிப்படையில் | மேல் | | | மத்திய | | | தென் | | | வடக்கு | | | | | கிழக்கு | | | வடமேல் | | வட மத்திய | | ஊவா | | சபரகமுவ | | மாவட்டம் மொத்தம் | சேகரிப்பு |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | கொழும்பு | கம்பஹா | களுத்துறை | கண்டி | மாத்தளை | நுவரெலியா | காலி | மாத்தறை | அம்பாந்தோட்டை | யாழ்ப்பாணம் | மன்னார் | வவுனியா | முல்லைத்தீவு | கிளிநொச்சி | மட்டக்களப்பு | அம்பாறை | திருகோணமலை | குருநாகல் | புத்தளம் | அநுராதபுரம் | பொலன்னறுவை | பதுளை | மொணராகலை | இரத்தினபுரி | கேகாலை | | |
| பொறியியல் தொழில்நுட்பவியல் (A/Level) | 35 | 3 | 4 | 2 | 3 | 1 | 1 | 1 | 1 | 1 | 2 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 2 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 35 | 70 |
| உயிர் முறைமைகள் தொழில்நுட்பவியல் (A/Level) | 35 | 3 | 3 | 2 | 2 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 2 | 1 | 2 | 1 | 2 | 1 | 2 | 1 | 35 | 70 |
| தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் (A/ Level) | 35 | 4 | 4 | 3 | 3 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 35 | 70 |
| | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| சேகரிப்பு | 105 | 10 | 11 | 7 | 8 | 3 | 3 | 3 | 3 | 3 | 4 | 3 | 3 | 3 | 3 | 3 | 3 | 3 | 5 | 3 | 4 | 3 | 4 | 3 | 4 | 3 | 105 | 210 |

12-337

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.